# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள்

நினைவுப் பேருரை – 2017

# யாழ்ப்பாணத்து இந்துக்கோயிற் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கு

பேருரை வழங்குபவர்


## கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன்

சிரேஷ்ட விரிவுரையாளர்,

இந்துநாகரிகத்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


17.08.2017

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் நினைவுப் பேருரை - 2017


# யாழ்ப்பாணத்து இந்துக்கோயிற் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கு


பேருரை வழங்குபவர்

**கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன்**

சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


17.08.2017



# ஆசியுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து கலைப்பீடத்தின் ஒரு துறையாக விளங்கும் இந்துநாகரிகத்துறையின் முதற்பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்களின் இரண்டாவது நினைவு பேருரைக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இந்துநாகரிகத்துறையின் புதிய நிலை உருவாக்கத்திற்கு காத்திரமான பங்களிப்பு செய்தவர் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் ஆவார் இந்துநாகரிகத்துறையூடாக பட்டப்பின் டிப்புளோமாக் கல்வியை கலைமாணிப்பட்டத்திற்கு மேலாக வழங்கிய சிறப்பினையும் முதலாவது கலாநிதிப் பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கு வழி வகுத்தவர் என்றவகையிலும் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்களின் பங்களிப்பு காத்திரமானதாகும்.

சிவாச்சாரிய சமூகத்திற்கும் இந்து சமயத்திற்கும், சமூகத்திற்கும் சிறப்பாக கல்விச் சமூகத்திற்குமான பணியை ஆற்றிய பெருந்தகையின் வழிகாட்டலில் உருவாகிய மாணவ சமூகம் அளப்பரியது. இப்பெருந்தகையின் சேவையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் **"வாழ்நாள் பேராசிரியர்"**, **"கௌரவ இலக்கியகலாநிதி"** ஆகிய பட்டங்களை வழங்கி கௌரவித்தது.

இவர் இந்துநாகரிகத்துறையின் ஸ்தாபகராகவும், முதற் துறைத் தலைவராகவும் பணியாற்றியதோடு மனிதப் பண்பியற் பீடாதிபதியாகவும், நுண்கலைத்துறையின் பொறுப்பாளராகவும் சேவையாற்றியமை கருத்திற் கொள்ளத்தக்கது. இந்து

நாகரிகத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன் அவர்களால் "யாழ்ப்பாணத்து இந்துக்கோயிற் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கு" எனும் தலைப்பில் இரண்டாவது நினைவுபேருரை ஆற்றுவது பொருத்தமுடையாக அமைகின்றது.

**பேராசிரியர்**
**இரத்தினம் விக்னேஸ்வரன்**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## வாழ் நாட் பேராசிரியர் இலக்கிய கலாநிதி

## கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள்

யாழ்ப்பாணத்து நல்லூரில் காசியப்ப கோத்திரத்தில் 15.08.1921ல் பிறந்தவரே பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் ஆவார். இவர் சேர்.பொன்.இராமநாதனின் சமய குருவாகத் திகழ்ந்தவரும், சிறந்த சோதிட விற்பனருமாகிய நல்லூர் பிரம்மஸ்ரீ ந.வே.கார்த்திகேயக் குருக்கள் சுந்தரம்மா தம்பதிகளின் சீமந்த புத்திரன் ஆவார்.

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலை, திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் தமது பாடசாலைக் கல்வியைக் கற்ற பேராசிரிய குருக்கள் பாரம்பரிய வைதிகக் கல்வியையும் சிவாகமக் கல்வியையும், சம்ஸ்கிருத மொழிக் கல்வியையும் முறையே வைக்கம் பிரம்மஸ்ரீ சிதம்பர சாஸ்திரிகள், தமது தந்தை வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் ஆகியோரிடம் கற்றார்.

இலங்கை பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருத மொழியைச் சிறப்புப் பாடமாக ஜேர்மனிய நாட்டு பேராசிரியை பெற்றி ஹைமன் அவர்களிடம் சிறப்புக்கலைமாணி பட்டத்தையும் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றார். இந்தியாவின் பூனே பல்கலைக்கழகத்து பேராசிரியர் R.N.தண்டேகார் தலைமையில் **இதிகாசபுராணங்களில் காணப்படும் சைவம் பற்றியும் தென் பாரதத்திலும் இலங்கையிலும் நிகழும் சைவக் கிரியை பற்றியும்** நிகழ்த்திய ஆய்வின் விளைவாக (Ph.D) கலாநிதி பட்டமும் பெற்றார்.

கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்திலும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் சம்ஸ்கிருதத்துறை விரிவுரையாளராகவும், துறைப் பொறுப்பாளராகவும் விளங்கிய பேராசிரியர் குருக்கள் சம்ஸ்கிருத மொழி தமிழ், ஆங்கிலம், இலத்தீன், பாளி ஆகிய மொழிகளில் ஆழமாகவும் பிரெஞ்சு, ஜேர்மனியம் ஆகிய மொழிகளில் ஆராய்ச்சிக்கு வேண்டிய அளவிலும் புலமை பெற்றவராவார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப்பட்ட 1974ம் ஆண்டில் மொழிகள் மற்றும் கலாசார கற்கை

நெறித்துறையின் பதில் தலைவராக நியமனம் பெற்ற பேராசிரியர் குருக்கள் 1975ல் உலகிலேயே முதன்முதலாக உருவாக்கப்பட்ட இந்துநாகரிகத்துறையின் முதற் பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் நியமனம் பெற்றதோடு இத்துறையினை வளப்படுத்தினர்.

சம்ஸ்கிருத இலகுபோதம் பாகம் I,II, வடமொழி இலக்கிய வரலாறு (வைதிக இலக்கியம்), **சைவத்திருக்கோவிற் கிரியை நெறி, சம்ஸ்கிருத கிரந்தாஷர லகுபோதம், இந்துப்பண்பாடு சில சிந்தனைகள், என் சரிதம்** எனும் நூல்களின் ஆசிரியருமான பேராசிரியர் குருக்கள் சிவாகமக்கிரியைகளை ஆற்றும் புலமையுடையவர். இவரே **ஸ்ரீ சக்ர பூஜை, ஸ்ரீ சண்டீயக்ஞ பத்ததி, ஸ்ரீ சக்ரபூஜா பிரயோகம், லகு ஸ்ரீ சக்கர பூஜா பிரயோகம்** முதலான பத்ததி நூல்களின் தொகுப்பாசியரும் ஆவார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பேராசிரியர் குருக்களின் சேவையைப் பாராட்டி 1991ல் **வாழ்நாட் பேராசிரியர்** எனும் தகுதியையும் 1998ல் **இலக்கிய கலாநிதி** எனும் கௌரவ பட்டத்தையும் வழங்கி கௌரவப்படுத்தியது.

இலங்கையிலும், இந்தியாவிலும் மேற்குலக நாடுகளிலும் சிவாச்சாரிய சமூகத்திற்கும் சைவத்தமிழ் சமூகத்திற்கும் கௌரவம் அளிக்கும் வகையில் பேராசிரியர் குருக்களுக்கு சிவநெறிக்கழகமும், சென்னை அழகப்பா பல்கலைக்கழகமும் இணைந்து **சிவாகம ஞானபானு** எனும் பட்டத்தை வழங்கியது. இலங்கை இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு **வேதாகமமாமணி** எனும் விருதினை வழங்கியது.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ் தானத்தின் ஆதீன கர்த்தாவாகவும், முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தின் பிரதம குருவாகவும் விளங்கிய பேராசிரியர் குருக்கள், ஸ்ரீ வித்யா குருகுலம், ஸ்ரீ முத்துவிநாயகர் வேதாகம ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் இயக்குனராகவும், சேர் பொன்.இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம், நியந்த்ரீ, லண்டன் - வேதாகம சபா ஆகியவற்றின் காப்பாளராகவும் விளங்கினார்.

பேராசிரியர் குருக்கள் அவர்களின் எழுத்தொன்பதாண்டு கள் வாழ்ந்து 2000.08.01.அன்று அம்பிகையின் திருவடி நிழலை அடைந்தார்.

# வாழ்நாட் பேராசிரியர் இலக்கியகலாநிதி பிரம்மஸ்ரீ. கா.கைலாசநாதக் குருக்கள் நினைவுப்பேருரை

துணைவேந்தர் அவர்களே, கலைப்பீடாதி அவர்களே, பதிவாளர் அவர்களே, பீடாதிபதிகளே, பேரவை உறுப்பினர்களே, மூதவை உறுப்பினர்களே, விரிவுரையாளர்களே, அவையோர்களே, உத்தியோகத்தர்களே, மாணவர்களே அனைவருக்கும் வணக்கம்.

யாழ்ப்பாணத்து நல்லூரில் 15.08.1921 இல் பிறந்து எழுபத்தொன்பது வருடங்கள் வாழ்ந்த பேராசிரியர் அமரர். கா.கைலாசநாதக் குருக்கள் அவர்களின் இரண்டாவது நினைவுப் பேருரையாக யாழ்ப்பாணத்து இந்துக்கோயிற் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கு என்ற பொருண்மையில் நினைவுப்பேருரை ஆற்றுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையில் முதற் பேராசிரியராக விளங்கிய பெருமை இவருக்குரியதாகும். இந்துநாகரிகத்தின் உன்னதமான விழுமியங்களை தமது வாழ்வியலாக வாழ்ந்து காட்டிய பேராசிரியர் அவர்கள், இதிகாசம் மற்றும் புராணங்களில் காணப்படும் சைவசமயம் பற்றியும், தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் விளங்குகின்ற சைவக்கிரியைகள் பற்றியும் ஆய்வு நிகழ்த்தி தனது கலாநிதி பட்டத்தினை இந்தியாவில் உள்ள பூனே பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டவர். இவர் சம்ஸ்கிருதம், ஆங்கிலம், லத்தீன், பாளி, பிரெஞ்சு, ஜேர்மனியம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்று விளங்கினார்.

இவர் கொழும்பு, இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பேராதனைப்பல்கலைக்கழகத்திலும் சம்ஸ்கிருத விரிவுரையாளரா கவும், துறைப்பொறுப்பாளராகவும் விளங்கியமை குறிப்பிடத் தக்கது. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் இவருடைய புலமைத்து

வத்தை கருத்திற்கொண்டு வாழ்நாள் பேராசிரியர், இலக்கிய கலாநிதி ஆகிய கௌரவப்பட்டங்களை இவருக்கு வழங்கி கௌரவித்துள்ளது. திருக்கோயிற் கிரியைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு பிராமணச் சிறுவர்களை ஊக்குவிப்பதற்காக இலவசமாகத் தனது வீட்டிலும், கொழும்பு முத்துவிநாயகர் கோயிலிலும் குருகுலம் அமைத்து செயற்பட்ட சிறப்புமிக்கவர். நல்லூர் சிவன்கோயிலின் ஆதீன கர்த்தாகவும், சிலாபம், ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான பிரதம குருவாகவும் விளங்கிய இவர், பல ஆய்வுநூல்களையும் எழுதிய பெருமைக்குரியவர். இவற்றுள் வடமொழி இலக்கிய வரலாறு, சைவத்திருக்கோயிற் கிரியைநெறி என்பவை குறிப்பிடத்தக்கவை. முன்னேஸ்வரத் தேவஸ்தானத்தில் சித்திரைமாதத்தில் நடைபெறும் வசந்த நவராத்திரி நாட்களில் இவர் ஸ்ரீ சக்கர பூசை நிகழ்த்துவது பலரை பரவசமூட்டுவதாக இருக்கும். யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை எதிர்காலத்தில் ஓர் இந்துகற்கைகள் பீடமாக அமைய வேண்டும் என்றும் அங்கே ஒரு இந்துகலைக்கூடம் நிறுவப்படவேண்டும் என்றும் பேராசிரியர் கண்ட கனவு இன்றுநனவாகும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். 7.8.2000 ஆம் ஆண்டு இவர் அமரத்துவம் அடைந்தபோதிலும்,இன்றும் பேராசிரியர் மரணமிலா பெருவாழ்வு பெற்று வாழ்கின்றார் என்று கருதுகின்றோம்.

# யாழ்ப்பாணத்து இந்துக்கோயிற் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கு

## அறிமுகம்

இலங்கையின் இந்து சமுதாயப்பண்பாட்டு வரலாற்றில் யாழ்ப்பாணக்குடாநாட்டின் வகிபாகம் முதன்மைச் சிறப்புடைய தாகும். இலங்கையில் கோயில்நகரங்களுக்குத் துலாம்பரமான சாட்சியாகத் திகழ்வது யாழ்ப்பாணக்குடாநாடேயாகும். அந்த வகையில் இந்துப்பண்பாட்டின் செழுமையினைக் காலாதி காலமாகப் பாதுகாத்து வளர்த்த பெருமை இப்பிராந்தியத்தில் செறிந்தும் விரவியுமுள்ள இந்துக்கோயில் களையே சாரும்.

ஆரியசக்கரவர்த்திகளோ அன்றி ஆறுமுகநாவலர் பரம்பரையினரோ யாழ்ப்பாணக்குடாநாட்டில் முன்னெடுத்த அத்தனை சமயப்பண்பாட்டு மாற்றங்களுக்கும், மறுமலர்ச்சி களுக்கும் நிலைக்களனாக அமைந்தவை திருக்கோயில்களே யாகும். அந்தவகையில் யாழ்ப்பாணத்தின் இந்துப்பண்பாடு என்பது ஒரு வகையில் இந்துக்கோயிற் பண்பாட்டுதளத்தினை மையப்படுத்தி மேற்கிளம்பியதாகவே அடையாளப்படுத்தப்படு கின்றது. பொது நிலையில் கோயில் அமைப்பும், அதன் செயல் நிலையும, வேதசிவாகமங்களின் பாற்பட்டதாயினும் கோயிற் பண்பாட்டின் எழுச்சியும் வளர்ச்சியும் புராண இதிகாச மரபுகளுக் குட்பட்ட தன்மையினை இனங்காண முயல்கிறது.

இவ்வகையில் நோக்கும் போது கோயில்களாற் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்தில் பௌராணிகச் செல்வாக்கின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டதாக அமைதல் யதார்த்த பூர்வமானதேயாகும். அதனை ஆய்வு செய்து வெளிக்கொணர்வதே இந்நினைவுப் பேருரையாகும்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் இந்துநாகரிகத் துறையின் முதற்பேராசிரியராக விளங்கிய வாழ்நாள்பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்கள் அவர்கள், "இதிகாச புராணங்கள் புலப்படுத்தும் சைவசமயமும் அதன் கிளை நெறிகளும் சிறப்பாக தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் நிலவும் சமயக்கிரியை மரபுகளுடன் தொடர்புபடுத்திய ஆய்வு" எனும் தலைப்பில் ஆய்வு செய்ததன் பயனாக கலாநிதிப் பட்டத்தினை பெற்றுக் கொண்டார். இவ்வாய்வின் வெளிப்பாடாக உருவாகிய மற்றுமோர் சிறந்த படைப்பு "சைவத்திருக்கோயிற் கிரியைநெறி" என்பதாகும். அவரது இப்படைப்புக்களை ஆராய்வதன் ஊடாக இந்துக்கோயிற் பண்பாட்டில் புராணங்கள் எத்தகைய செல்வாக்கினைச் செலுத்தியுள்ளன என்பதனை நாம் மதிப்பீடு செய்யக்கூடியதாகவுள்ளது. மேலும் அப்பெருந்தகையின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் நோக்கமுடையதாக "யாழ்ப்பாணத்து இந்துக்கோயிற் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கு" எனும் பொருண்மையில்இந்நினைவு பேருரையானது அமைகின்றது. இந்நினைவுப் இப்பேருரையினூடாகப் பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்களின் சிந்தனை வளம் பயன்பாட்டு நிலையில் யாழ்ப்பாணப்பிரதேசத்தில் எவ்வாறு பரவியுள்ளது என்பதனை இற்றைக்காலத்தில நோக்குவது அவசியமானதாகும். ஏனெனில் அது எதிர்காலத்தினைத் திட்டமிடுவதற்கான செயலாகவும், அதேவேளை பேராசானுக்கு நன்றிக்கடனைச் செலுத்துவதாகவும் அமைகின்றதெனலாம்.

**யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்கள்**

"சிவபூமி" என்று திருமூலரால் சுட்டப்பட்ட இலங்கை, திருமுறைகளிலும், திருப்புகழிலும் அடையாளப்படுத்தப்பட்ட பெருமையும் சிறப்புமுடையது. இத்தகைய பெருமையுடைய இலங்கைக்குச் சிரமாக அமைவது யாழ்ப்பாணமாகும். யாழ்ப்பாணம் இந்துக்களும் இந்துக்கோயில்களும் நிறைந்த பிரதேசமாகும். புள்ளி விபரங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 86% மேற்பட்ட மக்களினால் இந்துசமயம்

சார்புடையவர்களாக உள்ளனர்.[1] இலங்கையிற் காணப்படுகின்ற 4697 இந்து ஆலயங்களில் 1268 ஆலயங்கள் குறிப்பாக 25%ற்கும் அதிகமான இந்து ஆலயங்கள் யாழ்ப்பாணக்குடாநாட்டில் அமையப் பெற்றுள்ளமை நோக்கற்பாலதாகும். இப்பிரதேசத்தில் விநாயகர் (327), முருகன் (180), சிவன் (73) சக்தி (343), விஷ்ணு (15), வைரவர் (219), வீரபத்திரர் (36), ஐயனார் (23), நாகதம்பிரான் (05), ஏனையவை (47) என்றவாறாக பல்வேறுபட்ட தெய்வங்களும் மரபுசார்ந்த நிலையில் வழிபடப்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்திய - இலங்கைக்கிடையிலான சமூக பண்பாட்டு இடைவினைகளில் இதிகாச பௌராணிகக் கருத்தியல்கள் காத்திரமான முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன. அந்தவகையில் யாழ்ப்பாணத்து இந்துக்கோயிற் பண்பாட்டில் பௌராணிகக் கருத்தியல்களின் இழையோட்டத்தையும் துலங்குதிறனையும் பகுப்பாய்வு செய்வதே இந்நினைவுப் பேருரையின் முக்கிய நோக்கமாக அமைகின்றது.

**புராணம் - விளக்கம்**

புராணம் என்னும் சொல்லுக்குரிய பொருளமைதிகளாக பழைமை, பழங்கதை, அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றும், வியாச முனிவரால் இயற்றப்பட்டதும் சர்க்கம், பிரதிசர்க்கம், வமிசம், மன்வந்தரம், வமிசானுசரிதம் இவற்றைப் பற்றிக் கூறுவதுமான பழைய நூல்வகை, கோயிலில் புராணம் வாசிப்பதற்கு விடப்பட்ட மானியம் என்பன குறிப்பிடுகின்றன.[2]

உபநிடதங்களின் காலத்திலேயே **"புராணம்"** என்ற இலக்கிய வகை அறிவுலகிற்கு அறிமுகமாயிற்று. சாந்தோக்கிய உபநிடதத்தில் புராணம் என்ற சொற் பயிற்சி காணப்படுகின்றது. இதற்கு 'நேர்பொருள் தொன்மை, பழைமை என்பதாகும்' என்கிறார் சோ.ந. கந்தசாமி.[3]

புராணம் என்பதற்கு கி.வா.ஜகந்நாதன் சற்று வித்தியாச மாகவே விளக்கம் தருகின்றார்.

**"புராணம் பழமையும், புதுமையும் (புரா–நவம்) இணைந்தது என்பது பொருள். நிகழ்ச்சிகள் பல காலத்துக்கு முன்பு நடந்தவையாதலால் பழமையாகவும், உள்ளுறையினால் இக்காலத்தினருக்கும் பயன்படுவ தால் புதுமையாகவும் அமையும்."**[4]

என அவர் குறிப்பிடுகின்றார்.

புராணம் அமைய வேண்டிய முறை பற்றி நிகண்டு நூல்கள் வரைவிலக்கணம் கூறுகின்றன. ஐந்து இலட்சணங்கள் பொருந்திய தாக விளங்குவது புராணம் என அமரகோசம் எனும் நிகண்டு கூறுகின்றது. இவற்றுள் புராணங்களின் இலட்சணங்கள் எத்தகையது என்பதனை அமரகோசம் விளக்குகையில்,

**"சர்கஸ்ச பிரதிசர்கஸ்ச வம்சோ மன்வந்தராணி**
**வம்சானு சரிதம் சேதி புராணம் பஞ்சலக்ஷணம்"**[5]

என சர்கம், பிரதிசர்கம், வம்சம், மன்வந்தரம், வம்சானுசரிதம் எனும் ஐந்து இலட்சணங்களைப் புராணங்கள் உடையன என்று குறிப்பிடுகின்றது. குறித்த ஐவகை இலட்சணங்களுடன் விருத்தி (தொழில்), ரக்சா (தெய்வங்கின் அவதாரம்) முத்தி (வீடுபேறு), ஹேது (அவ்யக்தமான உயிர்), அபாஸ்ரய (பிரமா) என மேலும் ஐந்து விதமான இலட்சணங்களு மாக மொத்தமாகப் பத்துவிதமான இலட்சணங் களையுடையது புராணமெனப் பாகவத புராணம் கூறுகின்றது.[6] இத் தசலட்சணங் களை விடவும் பிரமா, விட்டுணு, சூரியன், உருத்திரன் ஆகிய தெய்வங்களைப் போற்றுதல், சிருட்டி, திதி, சங்காரம், என்பவற்றையும், உலகத்தை அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றால் பாதுகாத்தல் போன்ற விடயங்களும் கூறப்படுவதாக மத்ஸ்ய புராணம் குறிப்பிடுகின்றது. இதனையும் புராணத்திற்குரிய முழுமையான இலக்கணமாகக் கூறமுடியாதென்று கருதுவோரு முளர்.

**"இத்தகைய விரிவான வரைவிலக்கணத்திற்குள்ளும் புராணங்கள் எடுத்துக்கூறும் அனைத்து விடயங்களும் உள்ளடங்குவதாக இல்லை என்றே கூறத் தோன்றுகின்றது."**[7]

என்று ப.கோபாலகிருஷ்ண ஐயர், கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**புராணங்கள் - வடமொழி - மஹாபுராணங்களும் உபபுராணங்களும்**

வடமொழிப்புராண மரபுகள் பதினெண் புராணங்கள் என்கின்றன. மேலும், அவை மஹாபுராணங்கள், உபபுராணங்கள் எனப்பாகுபடுத்தப்படுகின்றன. இதன்வழி மஹாபுராணங்களாக பிரம, பத்ம, விஷ்ணு, வாயு, பாகவத, நாரதீய, மார்க்கண்டேய, அக்கினி, பவிஷ்ய, பிரமவைவர்த்த, வராக, லிங்க, ஸ்கந்த, வாமன, கூர்ம, மத்ஸ்ய, கருட, பிரமாண்ட புராணம் என்பன காணப்படுகின்றன. சில புராணங்கள் வாயு புராணத்திற்குப் பதிலாகச் சிவபுராணம் எனக் குறிப்பிடுகின்றன. உபபுராணங்களாக சனற்குமார, நரசிம்ம, நந்த, சிவதர்ம, துர்வாஸ, நாரதீய, கபில, வாமன, உஷண, மானவ, வருண, கலி, மகேஸ்வர, சாம்ப, சௌர, பராசர, மரீச, பார்கவ என்பவை குறிப்பிடப்படுகின்றன.[8]

**புராணங்கள் - தமிழ்மொழிப் புராணங்களும் தலபுராணங்களும்**

தமிழ் இலக்கியப் பரப்பிலே புராண இலக்கியம் ஒரு சிறப்பான பகுதியாகும். வடமொழியில் புராணங்கள் தோன்றியுள்ளன போன்று தமிழிலும் பல புராணங்கள் எழுந்துள்ளன.

> **"வடமொழி இலக்கியத்திற்கே தனியான சிறப்புடையனவாக விளங்குகின்ற புராணங்கள் தமிழ்மொழியில் மொழி பெயர்ப்புக்களாகவும், மஹாபுராணங்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள், ஸ்தலமகிமை முதலியவற்றை விரித்துக் கூறுகின்றனவாகவும், மஹாத்மியங்கள் ஆகவும் வளர்ச்சியடைந்துள்ளன. இவை தமிழ் மொழியில் வடமொழிக்கு அடுத்த நிலையில் விரிவடைந்து வளர்ச்சியுற்றதைப் போல வேறு மொழிகளில் வளர்ச்சியடையவில்லை"[9]**

எனவும் கூறுவர்.

தமிழில் புராணங்களின் தோற்றத்திற்கான காரணத்தை சி.பத்மநாதன்,

> **"சம்ஸ்கிருத மொழி, அதன் இலக்கிய மரபு என்பவற்றின் செல்வாக்கின் பயனாகவே தமிழ் இலக்கியப்பரப்பிற் புராணம் என்ற இலக்கிய வடிவம் தோன்றியது."[10].**

என்று குறிப்பிடுகின்றார்.

இத்தமிழ்ப்புராணங்களை நோக்கும் போது அவை இறைவனின் பரத்துவத்தினையும், அடியார் பெருமையினையும், வழிபாட்டின் சிறப்புக்களையும், ஆன்மிக நிலையின் அடி நிலையிலுள்ள மக்களுக்குப் பதியவைக்கும் வகையிற் கூறுவதை அவதானிக்க முடிகின்றது. தமிழ்ப்புராணங்கள் கூறும் பொருளை யும் அவற்றின் அமைப்பையும் கொண்டு கீழ்வரும் மூன்று நிலைகளிற் பகுத்துக்காட்டுகின்றார் சி.பத்மநாதன்,

**"சம்ஸ்கிருத மொழிப்புராணங்களின் தழுவல் நூல்கள், மெய்யடியார் வாழ்க்கை பற்றிய புராணங்கள், தலபுராணங்கள்"**[11]

மேற்கூறியவற்றுள் மூன்றாவது பிரிவாகிய தலபுராணங் களே அதிக எண்ணிக்கையுடையதாக உள்ளன. பௌராணிக மரபினைத் தழுவியடி வராலற்றுப்பனுவல்கள் எனும் தளத்தில் திருக்கோயில்களின் வரலாற்றைத் தலபுராணங்கள் சித்திரிக் கின்றன. இம்மரபில் காஞ்சிப்புராணம், சேதுபுராணம், கோயிற் புராணம், திருவானைக்காபுராணம், அருணாசலபுராணம், திருச்செந்தூர் புராணம் என்றும் விஷ்ணு புராணம், விநாயக புராணம், காசிபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் என்றும் தமிழ் மரபிலும், வடமொழி மரபிலுமாக பாமரமக்கள் புரிந்து கொள்ளும் தன்மையில் இயற்றப்பட்டுள்ளன. இவை புராணம் எனும் பெயரை மாத்திரம் இலக்கியச் சிறப்பும் செழுமையு முடைய தன்மைக்குரியதாகக் கொண்டு பாமர மக்களுக்குரிய பண்பாட்டு பகிர்வுக்கான ஓர் இலக்கிய உத்தியாக கையாளப்பட்டுள்ளமை சிறப்பிற்குரியதாகும். இதனாலேயே புராணம் எனும் சொல்லாட்சியும் இலக்கிய மரபும் வளம்பெற்று வளர்ச்சி பெற்றுவந்ததுள்ளன என்பதனை இங்கு சுட்டிக் காட்டலாம். இதே மரபிலேயே இலங்கையிலும் தலபுராணங்கள் பல தமிழில் எழுந்துள்ளன. தட்சிணகைலாசபுராணம், திருக்கரைசைப்புராணம், திரிகோணாசல புராணம், நகுலகிரிப் புராணம், இளந்தாரிப் புராணம், நகுலாசலபுராணம், திருக்கேதீச் சரப் புராணம், ஈழத்துச்சிதம்பரபுராணம், ஸ்ரீ கைலாசநாத புராணம், தென்கோவிற்புராணம், கதிர்காமப் புராணம், வல்லிப்புரத்தான் தலபுராணம், சித்தாண்டித் தலபுராணம், வல்வெட்டி அருள்மிகு

வேவில் வீரகத்தி விநாயகர் ஆலய தலபுராணம், வீரபத்திர சிவபுராணம் என வழங்கும் அருள்மிகு விசுவேசர் புராணம் போன்றவற்றைக்குறிப்பிடலாம்.

ஸ்ரீகைலாசநாதபுராணம் ஈழத்து சிவாச்சாரியார் ஒருவரால் இயற்றப்பட்தாகும். இப் புராணம் நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும். ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தான தலபுராணமாகும். எனினும் நூலாசிரியரின் சிவாகம நூலுணர்ச்சி, புராண மரபில் பயனபாட்டு நிலையில் பிரதிபலிக்கும் கோலங் களும் செல்வாக்குகளும் அதிகம் இடம் பெறுவதனை காண முடிகிறது.

## தலபுராணங்களின் தோற்றப் பின்புலம்

பல்லவர் காலப்பகுதியிற் சைவ நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தினை முன்னெடுத்துச் சென்ற போது, கோயில் வழிபாட்டிற்கு முன்னுரிமை அளித்தனர். எந்தெந்த ஊர்களுக்குச் செல்கின்றார்களோ அந்தந்த ஊர்களிலுள்ள தலங்களிலேயே இறைவன் எழுந்தருளி அருள்பாலிக்கின்றான் என வலியுறுத்திப் பாடிவந்தனர். சம்பந்தர் பாடியவற்றுள் இன்று கிடைக்கப்பெறும் 385 பதிகங்களுள் 07 பதிகங்கள் தவிர்ந்த ஏனைய யாவும் ஏதேனும் ஒரு தலத்தை மையப்படுத்திப் பாடப்பெற்றனவாக அமைகின்றன. திருநாவுக்கரசர் பாடியனவாக இன்று கிடைக்கப்பெறும் 312 பதிகங்களுள் 37 பதிகங்கள் தவிர ஏனையவை தலப்பதிகங்களாக விளங்குகின்றன. இவ்வாறு தமிழகத்து ஊர்கள் பலவற்றிலிருந்த ஆலயங்களை மையப்படுத்தி அவ்வாலயத்தின் மூர்த்தி, தல, தீர்த்த மகிமைகளையும் ஆலயச்சுற்றுப்புறச்சூழல் அழகினையும் பாடினர். இவ்வாறு அவர்களால் பாடப்பெற்ற ஆலயம் பாடல்பெற்ற தலமாகச் சிறப்பிக்கப்படலாயிற்று. நாயன்மார்களால் வலுப்படுத்தப்பட்ட தலவழிபாடும், தலங்களை விசேடித்துப் பாடும் மரபும் பிற்காலங்களில் தலபுராணங்கள் தோன்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளன எனலாம்.

திருத்தலத்தைப் பூலோக சிவலோகமாகக் காட்டும் திறன் தலபுராண ஆசிரியர்களிடம் இருந்தது. ஓவ்வொரு தல புராணத்திலும் குறித்த அத்தலமே வேண்டியவற்றைத் தருவது, முத்தியளிப்பது என்றெல்லாம் போற்றப்பட்டது. இதன் வாயிலாகத் தலயாத்திரைக்கான உணர்வுந்துதலையும், தலயாத்திரையின் பயன்குறித்த நம்பிக்கையையும் மக்கள் உள்ளங்களில் பதியவைக்க முயற்சிக்கப்பட்டது.

**"புண்ணிய தலங்களுக்குப் பக்தர்கள் பெருந்தொகையினராக யாத்திரை போகின்ற வழக்கம் ஏற்பட்ட காலத்திலே தலச்சிறப்பினை உணர்த்துவதற் காகத் தலபுராணங்கள் எழுதப்பட்டன."**[12]

**"இஷ்ட தெய்வ வழிபாட்டிற்குப் பக்தி மார்க்கமே பெரிதும் துணைபுரியும் என்ற சூழ்நிலை நிலவிய காலத்திலேயே தலபுராணங்கள் பெரிதும் தோற்றம் பெற்றன"**[13]

இவற்றை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் புராணங்கள் இந்துப்பண்பாட்டு இலக்கியங்கள் எனும் வகையில் இந்துக்களின் இறைநம்பிக்கைகள், தெய்வீகவியல் வரலாறுகள், பண்டையமரபுகள், கதைகள் என்பனவற்றை கூறுவனவாக அமைகின்றன. எனவே புராணம் பழைமையானது எனும் பொருள் விளக்கத்துக்கு மேலாக வரலாறு, மான்மிகம், கதை, லீலை, சங்கிதகம், விலாசம், தலபுராணம், தலமான்மிகம் என்றவாறாக தனித்துவமாகவும், திருக்கோயில்களுடன் இணைந்தவையாகவும் கூறும் மரபுகளை உடையனவாகின்றன.

### சிவாகமங்களும் புராணங்களும்.

இந்துசமயமரபில் இந்துக்கோயில்கள் முக்கியத்துவ முடையன. சிவாகம மரபின் விதிகளாயமைந்த திருக்கோயில் அமைப்பு. திருவுருவங்களின் அமைப்பு, கிரியைகளின் விரிந்த தன்மை என்பனவற்றைச் சிவாகமங்களே கூறி நிற்கின்றன. சிவாகமங்கள் மூலசிவாகமங்கள் என்றும், உபாகமங்கள் என்றும்

விரிவு பெறுகின்றன. திருக்கோயிற் பண்பாட்டின் மூல ஊற்றுக்களை சிவாகமங்கள் கூறுகின்றனவா? புராணங்கள் கூறுகின்றனவா? எனத்திட்டவட்டமாக கூறமுடியாதளவிற்குச் சிவாகமங்களிற் கூறப்பட்டவற்றை விரிவாக விளக்க எழுந்த நூல்களே புராணங்கள் எனலாம். சிவாகமங்கள் சிறப்பித்துக்கூறும் திருவுருவ வழிபாட்டிற்குப் புராணங்கள் கூறும் தெய்வீகக் கதைகளும், மரபுகளும் சிறந்த விளக்கமாக அமைகின்றன. திருவுருவங்களுக்குரிய விளக்கங்களை புராணங்கள் கூற மூர்த்தி எழுந்தருளியுள்ள இடத்தின் மகிமையைத் தலபுராணங்கள் கூறியுள்ளன எனலாம். புராணங்கள் தெய்வங்களின் தெய்வீக வரலாறுகளை விரிவுபடக் கூறிநிற்கின்றன என்பதற்கு கா.கைலாசநாதக்குருக்கள் தருகின்ற விளக்கம் பின்வருமாறு அமைகின்றது.

> **"ஆகமங்கள் சுருங்கக்கூறும் கருத்துக்களுக்குப் புராணங்கள் விளக்கங்கள் போலமைந்துள்ளன. சிவபெருமான் முக்கண்ணன், விடையூர்தி, விரிசடைக்கடவுள், எண்டோள் வீசிநின்றாடும்பிரான், நீலக்கழுத்தன், இறைவி அவனுடலிற்பாதியைப் பற்றி விளங்குகின்றாள், சூலப்படையுடனும் பிநாகம் என்னும் வில்லைத்தாங்கியும், தோலையுடுத்தும், சுடலைப்பொடிபூசியும் அவ்வப்பொழுது தோன்றுவான் என புராணங்களிறைவனது திருக்கோலங்கள் அமையவேண்டுவதை தெளிவாக விரித்துக்கூறுகின்றன. இவை இவ்விதம் அமையவேண்டி நிகழ்ந்த சந்தர்ப்பங்களையும் புராணங்கள் விளக்கிக்கூறுவதைப்போல் வேறெந்த நூல்களும் கூறமாட்டா".**[14]

சிவாகமங்கள் கூறும் விதிகள் அனைத்தையும் பிரமாணமாகக் கொண்டு கிரியைகள் செய்யும் முறைகளை ஒழுங்குபடுத்தி முறையாகக் கூறும் பத்ததி நூல்கள் பல சிவாகமங்களை அடுத்துத் தோன்றின.[15] இவற்றுள் அகோர சிவாச்சாரியார் பத்ததி "க்ரியாக்ரமஜ்யோதிகை" எனும் பெயரில் கிரியையின் முறைமையினை அவ்வாறே கூறிநிற்கின்றது. கிரியைகளைக் கோவைப்படுத்திக் கூறும் முறையால் அகோரசிவாச்சாரியாரின் பத்ததி பிரசித்தமடைந்தது. அதன் வழி

சிவாகம மரபுப் பூசையினை அகோரசிவாச்சாரியாரின் பத்ததி ஒழுங்கில் நடாத்துவதே பொருத்தமுடையது என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் கூறியுள்ளார். இதனை,

**"பூமியிலுள்ள சிவாலய விக்னேசுவராலய சுப்பிரமனியாலயங்களிலே பூசை, திருவிழாச் சம்புரோட்சண முதலிய கிரியைகள் செய்கிற ஆதி சைவர்களெல்லாரும் அகோரசிவாச்சாரியார் பத்ததியை கைக்கொள்ளுகிறவர்கள்...."**[16]

என்று அகோரசிவாச்சாரியார் பத்ததி தூஷணகண்டனத்தில் குறிப்பிட்டுள்ளமை மூலம் அறியமுடிகின்றது. இம்மரபினை திரிகோணாசலபுராணம் பூசனைப்படலம் 77 பாடல்களின் ஊடாக கூறிநிற்கின்றது. திரிகோணாசலபுராணத்தின் பூசனைப்படலம் அகோராசிவாச்சாரியாரின் "சிவாலய நித்திய பூஜாவிதி எனும் ஸ்ரீபரார்த்த நித்திய பூஜா விதி" என்கின்ற நூலை அடியொற்றிக் காணப்படுகின்றமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இங்கு உதாரணமாக

அகோரசிவாச்சாரியர் பத்ததி சூரிய பூஜை, செய்யப்படுகின்ற முறைபற்றி குறிப்பிடுகின்ற போது "காலை சந்திப்பூசையின் ஆரம்பத்தில் சூரிய பூசை செய்ய வேண்டும்...."[17] என்கிறது. இதனையே திரிகோணாசலபுராணம

**"...கண்டிடு நற்பாத்திரத்தின் அர்க்கிய பாத்தியம்**
**உடன் இயற்றி இரவி சகளீகரணந் செய்தே**
**கொண்ட உருப் பரிதி யெனப் பாவித்து...."**[18]

எனக்குறிப்பிடுவதிலிருந்து சிவாகம மரபுப்பூசை அகோரச் சிவாச்சரியரின் பத்ததி ஒழுங்கில் நடாத்தப்பட்டுள்ளது என்பதனை அறிந்துகொள்ளமுடிகின்றது.

### புராணங்கள் - பொருண்மை

இந்துசமய மரபின் பழைய இலக்கிய வடிவங்களே புராணங்கள் ஆகும். புராணங்களினுடைய உள்ளடக்கத்தினையும் அவை கூறும் விடயங்களையும், பாடபேதங்களையும்

காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் எடுத்துக் காட்டிய வண்ணம் உள்ளன. "புராணங்கள் வாழ்வின் எல்லா அம்சங்களையும் அடக்கியுள்ளன" என ஹரிப்பிரசாத சாஸ்த்திரி என்ற அறிஞர் கூறுகின்றார்.[19] இவற்றினை அடிப்படையாக்கொண்டு புராணங்கள் எத்தகைய கருப்பொருளை உள்ளடக்கியுள்ளன என்பதனை நோக்கலாம்.

"Agni-Purana – A Study"[20] என்பதனை S.D Gayana இன் ஆய்வும்,R.S. Hazre இன் "Studies in the Puranic Records on Hindu Rites and Customs",[21] B.Patanai இன் "Sivapurana A Poetic Analysis",[22] T.S. Rukmani இன் "A Critical study of the bhagavata Purana"[23],N.Gangadharan இன் "Lingapurana Astudy"[24],A.B.L. Awasthi இன் " Studies in Skanda Purana Part I(Geography, History, Polity & Society)[25]",K.Kailasanathakurukkl.,"A Study of Saivism of the Epic and Puranic periods, together with its ancillary cults with special reference to saiva religious practices prevalent in south India and Ceylon", [26].மா. வேதநாதன் இன் "கந்தபுராணத்தில் சைவசித்தாந்தக்கோட்பாடுகள்[27]", வே.இரா.மாதவனின் "தமிழில் தலபுராணங்கள்[28]", வே.கிருஷ்ணசாமியின் "தமிழில் தலபுராண இலக்கியம்[29]", சி. செல்வரஞ்சிதத்தின் "கி.பி 1100க்கும் கி.பி 1600க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்த சைவப்பேரிலக்கியங்களுள் கந்தபுராணம் பெறும் இடம்[30]", ஸ்ரீ.கிருஷ்னானந்தசர்மாவின் "இலக்கிய நோக்கில் அக்கினிபுராணம் - ஒருநுண்ணாய்வு[31]", சி.சுகந்தினியின் "இலங்கையில் தோன்றிய தலபுராணங்கள் புலப்படுத்தும் சைவப்பண்பாடு –ஓர் ஆய்வு[32]", ப.கோபாலகிருஷ்ணஜயரின்"இந்துப்பண்பாட்டு மரபுகள்"[33]மனோன்மணி சண்முகதாஸ், லலீசன்,ச,(தொ.ஆ)[34]" "பெரியபுராணம்காட்டும் வாழ்வியல், கி.வா ஜகந்நாதனின் கந்தபுராணச்சிந்தனைகள்[35]", அ.ச. ஞானசம்பந்தனின் "பெரியபுராணம் ஓர் ஆய்வு",[36]A.D Pusalkar இன் "Studies in the Epics and Puranas"[37], Vettammani இன் Puranic Encyclopaedia, A Comprehensive work with special Reference to the Epic and Puranic Literature[38], M.Winterniz இன் "A History Indian Literature"[39]போன்ற ஆய்வுகள் வெளிப்படுத்தும் தன்மைகளின் ஊடாக நோக்குகையில்

புராணங்கள் என்பவை சுமார் ஐந்து முதல் ஆறு இலட்சம் சுலோகங்களை உள்ளடக்கியவை என்பதும், இவை புராதன இந்திய சமுதாயத்தைப் படம்பிடித்துக்காட்டுவதோடு புராதனத் தெய்வீகவியல் வரலாற்றுத்துறைத் தரவுகளையும் தெளிவுபடுத்துகின்றன. இவைகளின் அடிப்படையில் நோக்குகையில் புராணங்கள் என்பவை புராதன இந்திய சமுதாயத்தின் தரவுப்பொக்கிசங்களாக விளங்குகின்றமையைத் தெளிவாக அவதானிக்க முடிகின்றது.

புராதன இந்தியசமுதாயத்தின் கல்வி, கலை, விரதம், வாழ்வியல், சமுக நம்பிக்கை, ரிஷிகளின் வரலாறு, காலம், மனுக்கள், மனுக்களின் வரலாறு, தெய்வவரலாறு, அரசர்களது வரலாறு, அரசியல், சட்டம், சமூகஒழுகலாறு, இலக்கியம், இசை, நடனம்,ஓவியம், நாடகம், யாப்பியல், அணியியல், காவியவியல், மொழியியல்,புவியியல், அரசியல், வரலாற்றியல், சமூகவியல், பொருளியல், வானியல், சோதிடவியல், அறிவியல், கணிதவியல். மருத்துவவியல், மரபியல், உளவியல், சிற்பவியல், போரியல், தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல், வானவியல், கிரியையியல், சமயவியல், தத்துவவியல், பக்தியியல், இடப்பெயரியல் என்றவாறாக புராதன இந்தியச்சமுதாயத்தினை விளங்கிக்கொள்வதற்கான மரபுவழி இலக்கியங்கள் எனும் உயர்வுடையனவாக புராணங்கள் விளங்குவதோடு, தொன்மையான தெய்வீக மரபினை அடிப்படையாக் கொண்டு அடுத்துவரும் காலப்பகுதிக்கு ஏற்ப விளக்கங்களை உள்ளடக்கியதுமான தெய்வீக வரலாற்றை உருவாக்கிய பெருமை உடையனவாகவும் விளங்குகின்றன. இவற்றின் அடிப்படையிலேயே "கற்பகவிருட்சம்" என்ற உயர்வு உயர்வு நவிற்சியடைமொழியுடன் பௌராணிகப் பனுவல்கள் ஒவ்வொன்றும் சிறப்பிக்கப்படுகின்றன. இதற்கு தக்கசான்றாக Puranic Encyclopaedia, A Comprehensive work with special Reference to the Epic and Puranic Literature எனும் நூல் விளங்குகின்றது.

இத்தகைய பரந்த இந்திய சமுதாயத்தின் ஒரு கூறாக விளங்குவதே "இந்துக்கோயிற் பண்பாடாகும்". இப்பண்பாடு

*மேற்கூறிய பல்வேறு புலங்களுடான தொடர்புகளையுடையது.* இக்கூறுகள் இலங்கையிற் சிறப்பாக யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்களில் எத்தகைய செல்வாக்குடையனவாகத் திகழ்கின்றன என்பதனை நோக்குவதாக அமைகின்றது. இதனைத்தெளிவுபடுத்த பண்பாடு பற்றிய வரையறையை நோக்குவது அவசியமானதாகும்.

## பண்பாடு – வரையறை

பண்பாடு பற்றிய ஆய்வினை மேற்கொண்ட அறிஞர்கள் பலவாறு விளக்கி வரையறை செய்துள்ளனர். அவற்றுட் பொருத்தமான சிலவற்றை நோக்கலாம்.

**"மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும் மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடாகும்"**[40]

**"ஒரு சமுதாயத்தில் நிலவியிருக்கின்ற சிறந்த கொள்கைகள், உயர்ந்த எண்ணங்கள், விரிந்த நோக்கங்கள், கட்டுப்பாடான உறவு, பணிவு ஆகியவையே பண்பாடு"**[41]

**"நிலத்தை நல்ல வகையில் மற்றவர்களுக்குப் பயன்கொடுக்கும் வகையாக பண்படுத்துதல் போல மனதை மற்றவர்களுக்கு உதவும் வகையில், மற்றவர்களை வாழ்விக்கும் நெறியில், நலம் பேணும்வகையில் சிந்தனையைப் பயன்படுத்தி நம்மை நாம் பண்படுத்திக் கொள்வது பண்பாடு"**[42]

பண்பாடு பற்றிய இத்தகைய கருத்துக்களை அடிப்படை யாகக் கொண்டு இந்துக்கோயிற் பண்பாடு பற்றி நோக்கலாம்.

## இந்துக்கோயிற் பண்பாடு

பண்பாடு பற்றி இத்தகைய கருத்துக்களை அடிப்படை யாகக் கொண்டு நோக்குகையில் இந்துக்கோயில் அமைப்பு, இந்துக்கோயில் வழிபாட்டுக்கென நிறுவப்படும் விக்கிரகங்கள். இந்துக்கோயிற் கலைவர்ணத்தை வளம்படுத்தும் சிற்பங்கள்,

கருவறைமீதெழுகின்ற விமானங்கள், ஆலயத்தின் தலை வாசல்களை அலங்கரிக்கின்ற கோபுரங்கள், விக்கிர வழிபாட்டில் இடம்பெறுகின்ற நுண்கலை அம்சங்களாகிய இசை, நடனம், ஓவியம், அலங்காரம் போன்ற அம்சங்கள், இந்துக்கோயிற் கிரியைகள், விரத அனுட்டானங்கள், பண்பாட்டோடு கூடிய வாழ்வை நெறிப்படுத்தக்கூடிய ஒழுக்க நெறிமுறைகள், தலம்பற்றிய பௌராணிகக்கதைகள், தலப்பெருமை, தீர்த்த மகிமை, தலங்களுக்கு மேற்கொள்ளவேண்டிய யாத்திரைகளின் முக்கியத்துவம், பக்திநெறி போன்ற இன்னோரன்ன அம்சங்களை எடுத்துக்கூறுவதோடு மாத்திரமன்றி இந்துப்பண்பாட்டின் மற்றொரு பரிமாணமாக விளங்குகின்ற அறிவியல் சார்ந்த அம்சங்களாகிய வானவியல், சோதிடம், மருத்துவம், கணிதவியல் என பல்வேறுபட்ட பரிமாணங்களை உள்ளடக்கியதாக புராணங்கள் அமைகின்றன.

இத்தகைய அம்சங்களை அறிவதற்குப் புராணங்கள் வழிகாட்டியாக இருக்கின்றன. இக்காரணத்தினால் தான் இந்துப்பண்பாட்டு மரபிலே புராணங்கள் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளதோடு காலந் தோறும் அறிஞர்கள் அவற்றில் கூறப்பட்ட விடயங்களை பல்வேறு கோணங்களிலும், பல்வேறு பரிமாணங்களிலும் ஆய்வு செய்தும் வந்துள்ளனர். அந்தவகையில் இவ்வாய்வானது மேற்கூறிய இந்துக்கோயிற் பண்பாட்டுக் கூறுகளில் புராணங்கள் செலுத்திய செல்வாக்கை ஆராய்வதாக அமைகின்றது.

**புராணங்கள் இந்துக்கோயிற்பண்பாட்டின் கருவூலம்**

புராணங்கள் தென்னாட்டிலே பக்திநெறியை வளம்படுத்திய நாயன்மார்களது திருப்பதிகங்களின் உருவாக்கத்திற்கும், மணிவாசகரது திருவாசகத்தின் விளக்கத்திற்கும், ஆழ்வார்களது திருப்பாசுரங்களுக்கும் சிறந்த சமயப் பின்னணியை வகுத்துக் காட்டியமை குறிப்பிடத்தக்கது. தென்னாட்டில் எழுச்சி பெற்ற அட்டவீரட்டத்தலங்கள், அவை தொடர்பிலான தெய்வ வரலாறுகள்

இந்துக்கோயில்களினை அலங்கரிக்கின்ற பௌராணிகக் கருத்தியல்களைப் பிரதிபலிக்கின்ற சிற்பங்கள் என்பவற்றை நோக்கும் போது "புராணங்களைத் தென்னாட்டுக் கருவூலங்கள்" என ஆய்வாளர்கள் விதந்துரைப்பதிலும் வியப்பில்லை என்றே எண்ணத்தோன்றுகின்றது.

சைவசமய, வைணவ நெறிகளிலுள்ள தத்துவக் கோட்பாடு களை உணர்ந்து நயப்பதற்கு ஏற்ற புராணக்கதை களையும் புராணங்கள் எடுத்தியம்புகின்றன. அப்புராணங்கள் இந்தியாவிலே பல்வேறு பிரதேசங்களிலுள்ள சமய ஐதீகங்களை அறிந்து கொள்வதற்கு ஏற்றவாறு அப்பிரதேச மொழிகளிலும் புராண நூல்கள் எழுந்துள்ளன. எடுத்துக்காட்டாக பதினெண் புராண வரிசையில் எழுந்துள்ள ஸ்காந்த புராணத்தை அடியொற்றியதாக தென்னாட்டில் கச்சியப்ப சிவாச்சாரியரால் உருவாக்கப்பட்ட கந்தபுராணம் முருகனுடைய தெய்வீகச் சிறப்புக்களைக் கூறுவ தோடு மட்டுமல்லாது சைவசமயத்தின் உன்னத நெறிமுறை களையும், சைவசித்தாந்த கோட்பாட்டு விளக்கத்தையும், பக்திநெறியையும் வளம்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். கந்தபுராணம்தான் யாழ்ப்பாணத்தில் எழுச்சிபெற்ற இந்துக்கோயில்களை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டு மரபில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் இந்துக்கோயிற் பண்பாடு

இந்துசமயமரபில் இந்துக்கோயில்கள் நிறைந்த பிரதேசமாகவும், கோயில் நகரமாகவும் யாழ்ப்பாணப் பிரதேசமே காணப்படுகின்றது. இருபெரும் சமயப்பிரிவுகளுள் சைவம், வைணவம் எனும் பிரிவினை யாழ்ப்பாணத்தில் காணமுடியாது. இவற்றிற்கு மேலாக யாழ்ப்பாணத்து சமூகத்தவர்களது வாழ்வியலாக வழிபாடுகளும், விரத அனுட்டானங்களும் பின்பற்றப்பட்டுவருகின்றன. இவற்றோடு சிவாகம மரபுசார்ந்த ஆலய வழிபாட்டு மரபுகளும், கிராமிய வழிபாட்டு மரபுகளும் யாழ்ப்பாண மக்கள் மரபிலேயே வேரூன்றிய பண்புகள் பல

காணப்படுகின்றன. இவ்விரு மரபுகளின் இழையோட்டத்தை பண்டைய மரபுகளும், கிராமிய மரபும் தக்கவைக்க முடியாதள விற்கு மாறிவரும் பண்பாட்டு மாற்றத்தை சமகாலச் செல்நெறியில் அவதானிக்க முடிகின்றது.

இந்துக்கோயில் பண்பாட்டில் திருக்கோயில் அமைப்பு முறைமைகள். திருவுருவச்சிறப்புக்கள் என்பன சிவாகம மரபிலும், கிராமிய மரபிலும் போற்றப்பட்டுவருகின்றன. அதேவேளை சமகாலசெல்நெறியில் சிவாகம மரபுகளின் துரிதமான வளர்ச்சிப் போக்கினால் கிராமிய வழிபாட்டு மரபுகள் மற்றும் கட்டட அமைப்புக்கள் பல சவால்களை எதிர்நோக்குகின்றன.

இத்தகைய பல்வேறு பரிமாணங்களையும் அடியொற்றிப் புராணங்களும், புராணம் சார்ந்த மரபுகளும் பண்பாட்டு நிலையில் பரந்த தன்மையினைக் கொண்டுவிளங்குகின்றன. இவ்வகையில் அம்மரபு இந்துக்கோயிற் பண்பாட்டில் ஏற்படுத்திய செல்வாக்கினை நோக்குவோம்.

## இந்துக்கோயிற் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கு

### மூர்த்தி

பண்பாட்டின் உறைவிடமாக விளங்குகின்ற இந்துக கோயில்களில் பல்வேறு நிலைகளில் இடம்பெறும் இறை மூர்த்தங்கள் காலங்காலமாக இந்துப் பாரம்பரியத்தின் பண்பாட்டுத் துறைகளை வளம்படுத்துவதிற் பெருந்துணை புரிந்து வந்துள்ளன. புராணம், ஆகமங்கள் சுட்டும் இறைமூர்த்தங்களை வழிபடுதற்கும், சமய உணர்வினை உள்ளத்தில் வளர்த்தற்கும் இந்துக் கோயில்களிற் சிறப்புப்பெறும் இறைமூர்த்தங்கள் அடிப்படையாக விளங்குகின்றன. அம்மூர்த்தங்களின் தெய்வீக வரலாற்றினை அறிவதற்கு புராணங்கள் பெரிதும் துணை புரிகின்றன. தெய்வங்கள் திருக்கோலம் கொள்ளும் போது சிறப்பாக பொருந்தி யுள்ள உருவ உறுப்புக்களின் அமைப்புகள், வாகனங்கள்,

ஆயுதங்கள், ஆபரணங்கள், திருவுருவுக்கான பெயர்க் காரணம், பெயருக்கான கதை மரபுகள் போன்ற இன்னோரன்ன விடயங்களை புராணங்கள் நன்கு புலப்படுத்து கின்றன. இறைமூர்த்தங்கள் பற்றி புராணங்கள் குறிப்பிடும் எண்ணற்ற பெயர்கள் அவர்களது வீரச்செயல்களையும், தெய்வீக மரபுகளையும் அடிப்படையாகக் கொண்டவை எனலாம்.

சிவனின் அருட்செயல்களான மார்க்கண்டேயரைப் பாதுகாப்பதற்காகக் காலனை உதைத்தமை, ஆலகால விஷத்தை உண்டமை, பிறை, கங்கை, பாம்பு என்பவற்றைத் தலையில் தரித்தமை, இடபத்தை வாகனமாகக் கொண்டமை போன்ற செயல்களை நகுலகிரிப்புராணம் குறிப்பிடுகின்றது.[43] விடத்தை உண்டதன் மூலம் விஷாபஹரண மூர்த்தமும், கங்கையைச் சூடியதன் மூலம் கங்காதர மூர்த்தமும், இடபத்துடன் கூடியவராக விளங்குவதினால் விருஷாபரூட மூர்த்தமும் இப்பாடலின் ஊடாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

காலனை உதைத்த வடிவமாகிய 'மிருத்யுஞ்ஞய வடிவம்' பற்றிய தெய்வீக வரலாறு இலிங்க புராணத்தில் இடம்பெறுகின்றது.[44] பக்தனான மார்க்கண்டேயருக்காக யமனை சங்காரம் செய்த வடிவமாக இவ்வடிவம் சுட்டப்படுகின்றது. இதனை காலாந்தக மூர்த்தி என ஆகமங்கள் சுட்டுகின்றன[45]. மிருத்யுஞ்ஞய வடிவத்தினை சித்திரிக்கும் வெண்கலபடிமத்தினை நல்லூர் ஸ்ரீகைலாஸநாதர் ஆலயக்கோபுரத்தில் காணலாம்.

சிவனது சம்ஹார மூர்த்தங்கள் அவனது வீரச்செயல்களை வெளிப்படுத்துவன. இவற்றுட் தலைசிறந்தன எட்டுச் செயல்கள். இவற்றினை அட்ட வீரட்டங்கள் என்று அழைப்பர். இதனைத் தலபுராணங்கள் பெரிதும் விளக்கிக் கூறுவதனைக் காணமுடிகின்றது. புராணங்கள் தென்னாட்டின் கருவூலங்கள் எனக் கூறத்தக்க வகையில் அட்ட வீரட்டங்களுக்கென் தென் நாட்டில் ஆலயங்கள் எழுந்துள்ளன. இதற்கு மேலதிகமாக இத்தகைய

திருவிளையாடல்களை ஆலயங்களில் உற்சவங்களாக நிகழ்த்து கின்ற மரபும் இருந்து வருகின்றது. இத் திருவிளையாடல்களை பெருவிழாவாக கொண்டாடி மகிழும் மரபு நல்லூர் ஸ்ரீகைலாஸநாதர் ஆலயத்தில் இடம்பெற்று வந்துள்ளமையை ஸ்ரீகைலாஸநாத புராணம் பதிவு செய்துள்ளது. ஸ்ரீகைலாஸநாத புராணத்தில் ஏழாவது சருக்கத்தில் அமைந்துள்ள பிரமசிரச் சேதச்சர்க்கம் முதல் பதினான்காவது சருக்கமாக அமைந்துள்ள மன்மதானுக்கிரகசருக்கம் ஈறாகவுள்ள சருக்கங்கள் எட்டிலும் இவ்விழாக்கள் பௌராணிய மரபில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு நடைபெற்று வந்த பிரமோற்சவம் காலப்போக்கில் இல்லாது போய்விட்டது. ஏழாம் நாள் இரவு நிகழ்த்தப்பட்டு வந்த யமசங்கார உற்சவம் மட்டும் வருடம் தோறும் ஐப்பசி திங்கள் இறுதி சுக்கிரவாரத்தில் இவ்வாலயத்தில் சிறப்பான முறையில் நடைபெறுகின்றது. ஐப்பசி மாதத்து கந்தசஷ்டியின் போது கந்தன் ஆலயங்களில் நடைபெறும் சூரசங்காரத்தினை ஒத்ததாக இத்திருக்கோயிலில் பௌராணிக மரபில் இவ்வுற்சவம் நடை பெறுகின்றது.

புராணங்கள் ஹரிஹரமூர்த்தம் பற்றிக் குறிப்பிடுகின்றன. சைவ வைஷ்ணவ வழிபாட்டு மரபில் சமரசநோக்கத்தினை ஏற்படுத்துவதில் இம்மூர்த்தம் முக்கிய பங்கு வகிக்கின்றது. அர்த்தநாரீஸ்வர வடிவத்திற்கு நிகராக உமைக்கு இடப்பாகம் அமைவது போல விஷ்ணுவுக்கும் இடப்பாகமே உரியது எனும் தத்துவத்தினை உணர்த்துகின்றது. புராணங்கள் அர்த்தநாரீஸ்வர வடிவத்தினுடைய தத்துவார்த்தினையும் எடுத்துக் கூறுகின்றன[46]. இதனூடாக சைவ – வைணவ சமய நல்லிணக்கம் சுட்டப்படுவதோடு யாழ்ப்பாணத்து இந்துக்கோயில் பண்பாட்டிலும் பிரதிபலித்து விளங்குவதனைக் காணமுடிகின்றது. யாழ்ப்பாணத்து இந்துக்கோயில் மரபில் சிவாலயங்களில் விஷ்ணு பரிவாரமாகவும், சிவனது மூர்த்தி பேதங்களுள் இலிங்கோற்பவ மூர்த்தி, ஹரிஹரமூர்த்தி, சரபேஸ்வர மூர்த்தி ஆகிய வடிவங்கள் இடம்பெறுகின்றன மேலும் சிறப்பம்சமாக பருத்தித்துறையில்

அமைந்த வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் ஸ்தூபியில் விஷ்ணு புராணத்தில் இடம்பெறுகின்ற மாலுக்கு சக்கரம் வழங்கிய வரலாற்றினைச் சித்திரிக்கும் சக்கரதான சிற்பமும்[47] ஹரிஹர வடிவமும்[48], விஷ்ணுவின் தசாவதாரங்கள் ஓவியமாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆலகால விஷத்தை உண்டமை பற்றிய புராணக்கதை மரபு பிரதோஷ பூசை வழிபாடுகளுடன் தொடர்புடையது. இதனை லிங்கபுராணம் எடுத்துக்கூறுகின்றது.[49] இம்மூர்த்தியை ஆகமங்கள் விஷாபஹரண மூர்த்தி எனக்குறிப்பிடுகின்றன.[50] யாழ்ப்பாணத்து சிவாலயங்கள் அனைத்திலும் வளர்பிறை, தேய்பிறை, திரயோதசித் திதியில் பிரதோஷ விரதத்தினை மக்கள் அனுஷ்டித்து வருகின்றனர். சிறப்பாக நந்திக்கான பூசையும், விருஷாபருடர் தரிசனமும் இதனுடன் தொடர்புடையதாக நிகழ்ந்து வருவது சுட்டிக்காட்டத்தக்கது. இம்மூர்த்திக்கான சிற்பவடிவங்கள் விஷாபஹரண மூர்த்தியாக நல்லூர் ஸ்ரீகைலாஸநாதர் ஆலயத்திலும், ஆலிங்கன சந்திரசேகர வடிவமாக கிரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம் மற்றும் வல்வெட்டித்துறை சிவன் ஆலயம் என்பனவற்றிலும் கண்டுகொள்ள முடிகின்றது.

மாங்கனி பெற்றமை, பிட்டுக்கு மண்சுமந்தமை போன்ற திருவிளையாடல்கள் நல்லூர் ஸ்ரீகைலாஸநாத சுவாமி ஆலயத்திலேயே நடைபெறுவதாக ஸ்ரீகைலாஸநாத புராணம் குறிப்பிடுகின்றது. இதனை,

**"....பொன்ன னைய மாங்கனி யொன்றதனை யேந்திப்**
**பொற்பு மிகு கயிலைமலை புகுந்தேசம்பு**
**சன்னிதியினிது வைத்து வணங்கியேத்தி**
**சாமியிந்தக் கனி பெருமை சாற்றொ ணாதே"**[51]

**"பிட்டுணா வுவந்து தின்று பிரம்படி பட்டும் வைகை**
**கட்டவு நில்லானான கடவுள் சீர்ச் சொக்க நாதர்..."**[52]

என்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். இந்நிகழ்வானது யாழ்ப்பாணத்து இந்துக்கோயில் பண்பாட்டில் புராண ஐதீகங்களின் வளர்ச்சியையும், தொடர்ச்சியையும் எடுத்துக்காட்டுகின்றது.

நல்லூர் ஸ்ரீகைலாஸநாதர் ஆலய மூர்த்திகளை உருவமைத்த சிற்பியின் சிறப்பும், அனுபவமும், பெயரும் கூறுவதினூடாக சிற்பிக்கு இருக்க வேண்டிய இலட்சணம் பற்றி ஸ்ரீகைலாஸநாத புராணம் கூறுகின்றது. இதனை,

**"சிற்ப நூலநேகந் தேர்ந்து செகதலத்தநேக கோவி**
**லெற் பொலிதரவியற்றியினியசீர் பலவுங் கொண்டோன்**
**கற்பக தாருவென்னக் கதிமன விவேக சிந்தை**
**நிற்பவன் சரவணப் பேர் நிலவினன்வற் கற்பித்தே."** [53]

எனும் பாடல் மூலம் அறியத்தருகின்றது.

எல்லாக்கலைகளுக்கும் ஆத்மாவாகவும், உடலாகவும் இருப்பவன் இறைவனே என்ற அடிப்படை நம்பிக்கை சைவசமயவாதிகளிடையே பண்டுதொட்டு இருந்துவருகின்றது. இறைவன் மீது கொண்ட இந்நம்பிக்கையின் காரணமாகவே மக்கள் அவனை பல்வேறு வடிவங்களில் வழிபட்டனர். இவ்விக்கிரக வழிபாட்டை அடிப்படையாகக்கொண்டு சிற்பக்கலை திருக்கோயில் கலையாகத் திகழ்வதைக் காணமுடிகின்றது. சிற்பஉருவங்கள், ஓவியங்கள் அமையாத கோயிற்கட்டடங்கள் இல்லையெனக் கூறுமளவுக்கு அவை முக்கியத்துவம் பெறுகின்றன. கோயில், தரை, சுவர், சிகரம்,கோபுரம், மண்டபம், தூண்கள், வாயில் நிலைகள் முதலிய கட்டடங்களில் சிற்ப உருவங்கள், ஓவியங்கள் காணப்படுகின்றன. காரைநகர் வாரிவளவு ஸ்ரீகற்பக விநாகர் ஆலயம், நல்லூர் கந்தசுவாமி ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கீரிமலை நகுலேஸ்வர ஆலயம், தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் போன்ற ஆலயங்களில் இடம்பெறுகின்ற சிற்பங்கள், ஓவியங்கள் மக்கள் மனதில் பக்தியை ஏற்படுத்தத்தக்கவகையில் அமைவது புராணங்களின் மற்றொரு செல்வாக்கு எனலாம்.

மூர்த்தங்களை ஓவியங்களாக சித்திரிப்பது சிவாலய நிர்மாணக்கலையுடன் மிகவும் தொடர்புடைய ஒன்றாக விளங்குகின்றது. கட்டட அமைப்பில் சிற்பங்கள் குறிப்பிட்ட சில இடங்களில் காணப்பட்டாலும் ஓவியங்களின் மூலம் சமயநிகழ்ச்சிகளை சித்திரிப்பது கோயில்கட்டடத்தின் எந்தப் பகுதியிலும் இடம்பெறமுடியும். கோயில்களில் புராணக்கதையை சித்திரங்களால் எழுதும் முறைமை, பொற்றகட்டில் எழுதும் பண்பும் அக்காலத்தில் நிலவியது. இது சித்திரக்கலை வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது.

கோயிற் சுவர்களில் அக்கோயிற் தலபுராணக்கதைகளை ஓவியங்களாகத் தீட்டுகின்ற முறைமை தற்காலத்திலும் இடம்பெறுகின்றது. இதனை சிறப்பாக ஈழத்துச்சிதம்பர ஆலய சுவர்களில் கண்டுகொள்ளமுடிகின்றது.

பொற்கொல்லர், சிற்பி, தச்சர் முதலிய தொழிலாளர்கள் தாம் தொடங்கிய பணிகளைக் குறித்த காலத்தில் முடித்துக் கொடுக்காது காலம் தாழ்த்தி முடிக்கும் பழக்கம் உடையவர்கள் என்பதனை ஈழத்துச்சிதம்பரபுராணம்,

**".....பற்பகல் வாளா விட்டா**
**ளவற்கமை பழக்கப் பண்பால்."**[54]

என்று குறிப்பிடுவதிலிருந்து அவர்கள உரிய வேலைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்கவேண்டும் என்ற நியமத்திற்கு உட்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்ற கருத்து புராணங்களில் பதிவாகியுள்ளன.

## தலம்

"ஆலயம் தானும் அரன் எனத்தொழுமே" என்ற சிவஞானபோத நூற்பா அடிப்பிரகாரம் தலங்கள் அனைத்திலும் இறை உறைவதாக உணர்ந்து வழிபடுதல் திருக்கோயிற்பண்பாட்டு மரபாகும். இம்மரபினை யாழ்ப்பாணத்துத் தலபுராணங்களில்

இடம்பெறும் தலமகிமைச் செய்திகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். அந்தவகையில் நகுலேச்சரம், ஈழத்துச்சிதம்பரம், நல்லூர் ஸ்ரீகைலாஸநாதர் ஆலயம், வல்லிபுர ஆலயம், வேவில் வீரகத்தி விநாகர் ஆலயம் ஆகிய தலங்கள் மீதெழுந்த தலபுராணங்கள் அவ்வத்தலங்களின் வரலாற்றினை விரிவாக எடுத்துக்கூறுகின்றமை குறிப்பிடற்பாலது. (பின்னிணைப்பு -1)

புராணங்கள் தலம்பற்றிய புராதன கதைமரபை கூறும் சிறப்புடையன. இலங்கையில் இந்துக்கோயில்களின் புராதன மரபைத் தொடர்புபடுத்தும் வகையில் ஸ்ரீமத் தட்சணகைலாச மகாத்மியம் விளங்குகின்றது. இந்நூல் ஸ்காந்த மகாபுராணத்தில் தட்சணகைலாச மகாத்மியம் எனும் இருபத்திரண்டு அத்தியாயங் களையுள்ளடக்கியதோடு இவ்வாலய வரலாற்றுச் செய்திகளுள் யாழ்ப்பாணத்து இந்துக்கோயில் மரபில் நகுலேஸ்வர ஆலயம், பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயம், வல்லிபுர ஆலயம் ஆகியன இடம்பெறுகின்றன. அதேபோன்ற மரபுடையதாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மாருதப்புரவீகவல்லிக்கு குதிரை முகம் நீங்கியமையும், கந்தபுராணத்துடன் தொடர்பு பெறும் வகையில் செல்வச்சந்நிதி ஆலயமும், கண்ணகி கதை மரபுடன் தொடர்புடையதாக சீரணி நாகம்பாள் கோயில், மட்டுவில் பன்றித்தலைச்சியம்மன் கோயில் போன்ற தலங்களின் மகிமைகள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. இதில் புராதன சிவத்தலங்களில் ஒன்றாக நகுலேஸ்வரம் விளங்கு கின்றது. வரலாற்று ஆதாரங்களுக்கு அப்பாற்பட்ட தொன்மைச் சிறப்பு இவ்வாலயத் திற்கு உண்டு. நகுலமுனிவரின் பிதிர் சாபம் நீங்கி நகுலகிரி எனப்புகழ் பெற்ற இத்தலத்தினை பௌராணிக மரபு விதந்துரைக்கின்றது.[55]

யாழ்ப்பாண அரசர் காலத்து தலபுராணங்கள் பற்றி எஸ் சிவலிங்கராஜா குறிப்படுகையில்

**பெரும்பாலான புராணங்கள் நம்பிக்கைகளின் அடிப்படையிலே கர்ண பரம்பரை கதைகளையும் உள் வாங்கி**

பாடப்பட்ட போதும், ஆட்சியாளர்களின் திருப்பணிச் செயற்பாடுகளையும், அவர்களது ஆட்சிப் பிரதேச நிலைகளையும் சுட்டிச் செல்வதைப் பெரும்பாலான தலபுராணங்களினூடு கண்டு கொள்ளலாம். தமது ஆட்சிப் பரப்பின் நிலைபேற்றையும், விஸ்தரிப்பையும் நிலைநிறுத்தும் பொருட்டு சமயத் தலங்களை அமைப்பதும், புணரமைப்பதும், அவை முக்கிய புராணங்களை செய்விப்பதும் அரசின் முக்கிய செயற்பாடுகளாகும்.[56]

இந்த வகையில் தலவரலாறுகளை சித்தரிப்பனவாகத் தலபுராணங்கள் விளங்குகின்றன.

சிவபெருமான் சுயம்புலிங்கமாக விருபாக்கன் என்ற வைசிகனுக்கு காட்சி கொடுத்த நிகழ்ச்சியை தட்சணகைலாச மகாத்மியத்தில் உள்ள வாரி வனலிங்க மகிமையுரைத்த படலத்தில் குறிப்பிட்டுள்ளது. இதே இடத்தில் அமைக்கப்பட்ட ஆலயம் தான் சாவகச்சேரியிலுள்ள வாரிவனேஸ்வரர் ஆலயம் ஆகும். தட்சிணகைலாச மகாத்மியத்தின் நவசைலப்படலத்தில் புத்தூரில் உள்ள சிவன் கோயில் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் கேணி, நந்தவனம் மற்றும் பல இடத்தைச் சேர்ந்த மக்கள் வழிபட்டு நன்மையடைந்தமை பற்றியும் அதில் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.[57]

யாழ்ப்பாணத்துத் திருக்கோயில்களின் மீதெழுந்த தலபுராணங்களில் அவ்வத் தலங்கள் பற்றிய செய்திகள் மட்டுமன்றி ஏனைய தலங்களின் விபரங்கள், வரலாற்றுச்செய்திகள், அங்கு உறையும் தெய்வங்களின் தத்துவங்கள் என்பவை பற்றிய கருத்துக்களும் விரவியுள்ளன. ஸ்ரீகைலாஸநாதபுராணம் சபாபதிச்சருக்கத்தில் திருநெல்வேலி சிவன்கோயில் தோன்றிய வரலாறு, நடராஜப்பெருமான் உட்படப் பரிவாரமூர்த்திகளை எழுந்தருளச்செய்த சிறப்பு, சிறந்த நிர்வாகியாகிய சபாபதிக் குருக்கள் பற்றிய விடயங்கள், விக்கிரக அபிஷேகத்திற்கு பால் எடுப்பதற்காகப் பசுவைவளர்த்த விபரங்கள் போன்ற வரலாறுகள்

பலவும் இடம்பெற்றுள்ளன. 1571 பாடல்களில் நல்லூர் ஸ்ரீகைலாஸநாதசுவாமி ஆலய வரலாற்றை பாடிய நூலாசிரியர் 86 பாடல்களில் திருநெல்வேலி சிவன் ஆலய வரலாற்றை சபாபதிச்சருக்கம் எனும் தனிச்சருக்கமாக உருவாக்கி அவ்வாலய வரலாற்றை கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது. அதேபோன்று ஈழத்துச்சிதம்பர புராணம், காரைவளச்சருக்கத்தில் காரை நகரிலுள்ள திருக்கோயில்களைப் பற்றித் தொகுத்துக் கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

## தீர்த்தம்

திருக்கோயில் வழிபாட்டு மரபில் தீர்த்த யாத்திரை முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. தவம் செய்வத னாலும், யாகம் செய்வதினாலும் ஈட்டவல்ல பெரும் பயனையெல்லாம் தீர்த்தயாத்திரை சென்று அப்புனிதத் தீர்த்தங்களில் நீராடுவதனால் பெறமுடியும் என்பது சைவ சமயத்தவரது நம்பிக்கையாகும். புனிதத் தீர்த்தங்கள் யாத்திரை செய்வதற்குரிய புண்ணிய தலங்களாகக் கருதப்படுவது கவனிக்கத்தக்கது. புண்ணிய தீர்த்தங்கள் புனிதம்மிக்க ஆலயங்களிலோ அல்லது தெய்வீகம்வாய்ந்த நதிக்கரைகளிலோ அமைந்து விளங்குவதையும் காணமுடிகின்றது. மூர்த்தியை வழிபடுவதற்கு ஓரிடத்திற்குச் செல்வது தலயாத்திரை என்றும், தீர்த்த யாத்திரை என்றும் குறிப்பிடப்படுகின்றது. இதனை க்ஷேத்திராடனம் எனவும் குறிப்பிடுவர்.[58].

யாத்திரை என்பது ஓர் இலட்சியத்தை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு புனிதப் பயணமாகும். தீவினைப்பயனைக் களைவதற்காக அல்லது பாபநாசத்திற்காக ஒருவர் மேற் கொள்ளும் சமயச்சார்பான புனிதப்பயணம் யாத்திரையாகும். ஆகமமுறைப்படி கோயில்கள் கட்டப்படுவதற்கு முன்னர் தீர்த்தயாத்திரை மேற்கொள்ளப்பட்டது என்றும், அதன்பின்னர் திருக்கோயில்கள் பெருகிய காலத்தில் தலயாத்திரை எனும் விரிந்த செயற்பாட்டிலே தீர்த்த யாத்திரை என்ற சிந்தனைக்கூறு சங்கமமாகிவிட்டது என்றும் குறிப்பிடலாம்.

தீர்த்தம் என்பதற்கு வழி, பாதை, துறை எனப் பலபொருண்மைகளை இந்துக்கலைக் களஞ்சியம் குறிப்பிட்டுள்ளது. ஓர் ஆலயத்தின் தீர்த்த மகிமையை அவ்வத் தீர்த்தங்களில் மூழ்கி வழிபட்டோரை விட்டு நீங்கிய பாவங்களால் அறிந்து கொள்ள முடிகின்றது.

**"தங்கள் மலங்கழுவு வார் வந்து சார்தலினால்**
**எங்கள் பிராட்டியும் எங்கோனும் போற்றிசைந்த பொங்குமடு"[59]**

எனும் திருவாசகப் பாடலடி புண்ணிய தீர்த்தங்களில் மூழ்குவதன் மூலம் மலங்கள் கழுவப்பட்டு தூய்மையடையலாம் என்பதனை அறியத்தருகின்றது. ஆறு, குளம், கடல் முதலிய இடங்களுக்கு இறைவன் தீர்த்தமாடச் செல்வது அங்கேயுள்ள உயிர்களுக்கு அருள் செய்யும் குறிப்பென்றும், இறைவன் தீர்த்தமாடும் புண்ணிய தீர்த்தங்களில் பக்தர்கள் நீராடுதலால் பிறவியாகிய வெப்பம் தணிந்து சிவப்பேறு அடைவர் என்றும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. கங்காதரர், சந்திரசேகரர், சுஹாசனர் முதலிய தெய்வங்கள் பற்றிய விபரங்களை தீர்த்தங்களுடன் தொடர்புபடுத்தி புராணங்கள் கூறுகின்றன.[60] சிவனது தலையில் கங்கை எவ்வாறு இடம்கொண்டாள் என்பது பற்றித் தேவிபாகவதம் குறிப்பிடுகின்றது.[61] மேலும், அக்கினி புராணம் இறந்தவர்களது சாம்பல் மற்றும் எலும்புகள் கங்கையில் கரைக்கப்பட்டால் அவர்கள் சொர்க்கலோகம் அடைவார்கள் எனும் செய்தியினை எடுத்துக்கூறுகின்றது.[62]

சிவனின் திருவுள்ளப்படி பாதாளத்தில் உள்ளதான கங்காதீர்த்தமே இங்கு வந்தடைந்துள்ளது என்பதனை நகுலகிரிப்புராணம்,

**"இன்னதோர் தன்மையி னிறைவன் வாய்மையின்**
**துன்னுபா தலத்தமர் தீர்த்தந் தூய்மையே**
**டந்நகச் சாரல்வா யணுகி யார்ப்பொடு.."[63]**

எனக் கூறுதலாலறியலாம்.

நகுலேச்சர ஆலயத்தின் புண்ணிய தீர்த்தமாக விளங்கும் பாதாளகங்கை எனும் நகுலதீர்த்தம் பற்றித் தலபுராணங்கள்

புலப்படுத்துகின்றன. நகுலகிரிப் புராணம் தீர்த்த விசேடமுரைத்த படலத்தில் உள்ள எழுபத்தைந்து பாடல்கள் தீர்த்தம் பொருந்திய தன்மையினையும், தீர்த்தத்தில் விதிமுறைப்படி நீராடுவதன் மூலம் பெறப்படுகின்ற பயன்களையும் விரிவாக விளக்குகின்றது. ஆடிஆமாவாசையின் போது நகுலதீர்த்தத்தில் தீர்த்த வழிபாடியற்றிப் பிதிர்கடமையைச் சிறப்பாகச் செய்வார்கள்.

நகுல தீர்த்தத்தில் நீராடி உரிய முறைப்படி அந்தியேட்டிக் கிரியையினை நிகழ்த்தினால் பிறவியை நீக்கி சிவலோகத்தை அடைவார்கள் என்பதனை நகுலகிரிப்புராணம்,

**"தன்னா ருடலமரு மாவி தனையகன்றார்க்**
**கின்னே விதியி னியலந்தி யேட்டிதனை**
**முன்னூல் விதிநதிவாய் மூழ்கிமுறைபுரிய**
**மன்னா ருயிர்கள் பிறவிதனை மாற்றுவரே"[64]**

எனக் கூறுகின்றது.

நகுலேச்சரம் என்ற புனித தலத்திற்கு மாருதப்புரவீகவல்லி வந்து அப்புனித தீர்த்தத்தில் குளித்து குதிரை முகம் நீங்கப்பெற்று அழகிய உடல் எடுத்த பெருமையுடையது நகுலதீர்த்தம் எனத் தலபுராணங்கள் குறிப்பிடுகின்றன. இதனை,

**"....குதிரையின் முகம் ஒழித்த தீர்த்திகையைக்**
**கொண்ட சீர் பெறு நகுலமால் வரையும்...."[65]**

எனத் திரிகோணாசலபுராணமும் குறிப்பிடுகின்றது.

**விருட்சம்**

ஆலயங்களில் இடம்பெறும் தலவிருட்சங்கள் வழிபாட்டுக் குரிய பொருட்களில் ஒன்றாக விளங்குகின்றன. புராணங்களில் இவை சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு ஆலய விருட்சத்தின் சிறப்பினை அவ்விருட்ச நிழல்களில் இருந்து அதன் பயனை நுகர்ந்ததனால் நீங்கிய பிணிகள் முதலியவற்றாலும் விளங்கக் காணலாம். சில ஆலயங்களுடைய வழிபாட்டின் தொடக்கம் விருட்சங்களின் கீழேயே ஆரம்பிக்கப்பட்டன. பின்பு

கோயிற்கட்டடங்கள் அமைந்தாலும் தெய்வப் படிமங்கள் ஒரு காலத்தில் வைத்து வழிபட்ட விருட்சங்களும், புனித நிலையில் தலவிருட்சங்களாயின.

மருத்துவப்பொருட்களையும், மூலிகைகளையும், மலர்களையும், மரவுரிகளையும் தருகின்ற பொருளாக மரத்தினைக்கொண்டு மரநிழல்களில் வழிபாடு செய்யும் மரபினை அக்கினிபுராணம் குறிப்பிடுகின்றது.[66] இதனை அடியொற்றி மிருத்சங்கிரஹணம் எனும் கிரியை மரபு திருக்கோயில்களில் தலவிருட்சங்களின் அடியில் நிகழ்த்தப்படுவது ஒப்பு நோக்கத் தக்கது. சிவாகம மரபில் இறைவனது சாந்நித்தியம் மேலோங்கும் இடமாகத் தலவிருட்சம் சுட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.[67] மேலும், ஆலமர் கடவுள் என்ற சிறப்பு தட்சிணாமூர்த்திக்கு இருப்பது போன்று அரச மரநிழலில் விநாயகர் இருப்பதும் சுட்டிக்காட்டத் தக்கது. இம்மரபினை அனுசரித்து ஆலயங்களின் தோற்றுவாய்க்கு அடித்தளமாக அமைந்த விருட்சங்களின் பெயர்களை முன்வைத்து யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்களின் பெயர்கள் அழைக்கப்படு கின்றமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். உதாரணமாக, மருதடி விநாயகர் ஆலயம், அரசடி பிள்ளையார் ஆலயம் என்பவற்றைக் கூறலாம். இதேபோன்று நல்லூர் கந்தன் ஆலயத்திலும், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திலும் மாமரமும், பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலயத்திலும், நயினை நாகபூசணி ஆலயத்திலும் வன்னிமரமும் தலவிருட்சங்களாக இடம் பெறுவதைக் காணலாம்.

விருட்சங்கள் மருத்துவப்பொருளாக விளங்குவதாக அக்கினி புராணம் குறிப்பிடுவதை உள்வாங்கி யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்களில் சிறப்பாக பொன்னாலை வரதராஜப் பெருமாள் போன்ற ஆலயங்களில் குழந்தைப்பேற்றுக்காக விருட்சங்களில் தொட்டில் கட்டி நேர்த்தி செய்யும் மரபு காணப்படு கின்றது. இந்நிகழ்வு யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்களில் புராணங்களின் செல்வாக்கினை எடுத்துக்காட்டுகின்றது.

மேலும், இந்துப்பண்பாட்டின் மூலநூலாக வைத்தெண்ணப் படுகின்ற வேதங்களில் கூறப்பட்ட வழிபாட்டு முறைகள் புராண இலக்கியங்களில் வேள்வி, தவம், தீர்த்தம், தியானம், தோத்திரம், விரதம், பூசை என்னும் வணக்கமுறைகளாக விருத்தியுறலாயின. கடவுளரைக் குறித்து ஆற்றப்படும் மேற்படி வழிபாடுகள் யாழ்ப்பாணத்து இந்துக்கோயிற் பண்பாட்டு மரபில் ஏற்படுத்திய செல்வாக்கினை நோக்குவது சிறப்பம்சமாகும்.

**தவம்**

புராணங்கள் யாகத்தைக்காட்டிலும் தவத்திற்கே உயரிய நிலையினை அளிக்கின்றன. "கலியுகத்தில் தவம் ஒன்றே என்னை அடையச் சிறந்த வழி" என்று சிவபிரான் எடுத்துக்கூறும் வகையில் புராணத்தில் வருகின்ற கருத்து சைவத்திற்கு தவம் பெரிதும் உடன்பாடானது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கைத் தலபுராணங்களிலும் யோகிகள் தவம் இயற்றிய செய்திகளைக் காணமுடிகின்றது. அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப்பற்றையும் துறந்து சிவனிடத்தில் பற்றுக் கொண்டவர்களே முனிவர்கள் ஆவார். இம்முனிவர்களின் இயல்பு பற்றி ஈழத்துச்சிதம்பர புராணம்,

> **"...யிரு பற்றுஞ் சாராது**
> **சிவப்பற்றிற் சார்ந்து நின்ற**
> **ஏந்துதவ முனிவர்"**[68] என்கிறது.

வெப்பமிக்க வேளையில் சூழ்ந்திருக்கும் நெருப்பின் நடுவிலும், குளிர்மிக்க வேளை நீரில் நின்றும் மரவுரி தரித்தும், உணவையொழித்தும், தவம் நிகழ்ந்த வரலாறுகள் தலபுராணங் களில் காணமுடிகின்றது. இதனை ஸ்ரீகைலாஸநாதபுராணம்,

> **"பனிமழை வெய்யிற்காலம் பதைத்திடா தேகசிந்தை**
> **தனியுறவனே ககாலஞ் சரித்தன ன னையகாலை..."**[69]

என்பதால் அறியலாம்.

தவநெறியில் ஒழுகுகின்ற துறவிகளது மனம் பரிசுத்த மடைவதற்காக சிவன் நகுலேச்சரத்திற்கு வந்ததாக நகுலகிரிப் புராணம் கூறுகின்றது. இதனை,

**"...துறந்திடுந் தவநெறித் துறவர் தூய்மையிற்**
**சிறந்திட விலங்கையிற் சிவனுற் றானரோ"**[70] என்பதால் அறியலாம்.

நகுலமாமுனிவர், முசுகுந்தச் சக்கரவர்த்தி, நளமகாராசா போன்றவர்கள் நகுலேஸ்வர ஆலயச் சூழலில் தவம் இயற்றித் தம்முடைய துன்பங்கள் நீங்கப்பெற்று இம்மை, மறுமைப் பயன்களைப் பெற்ற இடமாக மாவை நகரம் விளங்குவதை நகுலகிரிப்புராணம்,

**"முன்னர் மாதவ நகுலமா முனிமுசு குந்தன்**
**றன்னை நேரிலா நளன்முதற் றரனிப ரனுகி**
**இன்ன னீங்கிநல் லிகபர மடைந்திட வருளி**
**மன்னு மேன்மையுற் றிருந்தது மாவைமா நகரம்"**[71]

எனக் குறிப்பிடுகின்றது.

தவத்தால் முத்திதரும் திருத்தலமாக ஈழத்துச்சிதம்பரம் விளங்குவதனை,

**"காசியி லிறக்க வீடாந்**
**தில்லையைக் காண வீடாம்**
**பேசிடு மாரூர் தன்னிற்**
**பிறந்திட வீடாம் பெட்பார்**
**தேசுறு மருணை தன்னைச்**
**சிந்திக்க வீடா மென்பர்**
**மாசிலிப் பதியில் நீடு**
**மாதவஞ் செய்தால் வீடாம்"**[72]

என்று கூறுவதன் ஊடாக இத்தலம் தவவழிபாட்டு முறைக்கு உரிய தலமாக தலபுராணம் சித்திரித்துள்ளது.

நாரணர், பிரகலாதன், நந்தி, காசிபன், பிருங்கி, கபிலன்,

வாமர், ஸ்ரீவத்ஸர், மார்க்கண்டேயர் போன்ற உயர்ந்த இருடிகள் தவலோகம், மகாலோகம்,சனலோகம் போன்ற மேலுலகங்களில் இருந்து இரதோற்சவ சிறப்புக்காண நல்லூர் ஸ்ரீகைலாஸநாத ஆலயத்திற்கு வந்ததாக ஸ்ரீகைலாஸநாதபுராணம் குறிப்பிடு கின்றது.[73]

இதனை பொ.கைலாசபதி,

**"மார்க்கண்டேயர் போன்றவர்கள் அவர்கள் வாழ்ந்த காலத்தில் பூவுலகில் தவம் செய்ய முடியும். யுக தர்மங்கள் மாற இப் பூமியில் நல்லோர்கள் இருந்து தவம் செய்ய முடியாது. அதனால் அவர்கள் இறைவனை வேண்டித் தவத்திற்கு ஏற்ற மேலுலகங்களில் இடம்பெறுவர்."**[74]

எனும் கருத்துடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

தவம் செய்து வெற்றி காணுவது மிகவும் கடினமான சாதனையாக விளங்குகின்றது. தவம் செய்வதற்குத் தூய்மையான வாழ்க்கை இன்றியமையாதது. உடல்வலு போதிய அளவிற்கு இருப்பதும், புறத்தே உடம்பைத் தாக்கும் வேதனைகளைப் பொறுத்துத் தாங்குவதும் ஒருசிலருக்கு மட்டுமே இயலும். எனவே இத்தவம் செய்யும் முறை பெருமளவு கடைப்பிடிக்குமளவுக்கு இன்று பிரசித்தி பெறவில்லை.

**தியானம்**

லிங்கபுராணம் தியானத்திற்கு பொருத்தமான சூழல்,[75] இதயக்கமலத்தில் சிவனை தியானம் செய்யும் மரபு[76] பல்வேறுவகையான தியானவகைகள்[77] என்பவற்றை எடுத்துக் கூறுகின்றது. மேலும் "தியானம் என்பது கர்மவினைகளை நீக்கவல்லது. தவத்தையும், ஜெபத்தையும் செய்ய உகந்தது. அதற்கு ஞானம் முக்கியமானது" என்று இலிங்கபுராணம் கூறுகின்றது.[78]

தியானத்திற்கு மந்திரங்கள் அவசியமானதாகும் என்பதனையும் புராணங்கள் குறிப்படுகின்றன பஞ்சாட்சர மந்திர ஜெபம் உடலையும், உள்ளத்தையும் தூய்மைப்படுத்துகின்றது

என்கிறது லிங்கபுராணம்.[79] திரயம்பக மந்திரம் மோட்சத்தை அளிக்கவல்லது என்கிறது.[80] இவற்றிற்கு மேலாக ஓம் எனும் பிரணவ மந்திரத்தினை ஜெபம் செய்யும் சிறப்பினை சிவபுராணமும[81] கூறுகின்றது.

திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு நிகழ்த்தப்படும் கிரியைகளின் உயிர் நாடியாக விளங்குவது மந்திரம் ஆகும். "மந்திரமின்றேல் கிரியைகள் இல்லை" எனக் கூறுமளவுக்கு வழிபாட்டில் மந்திரங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. "மந்திரம்" என்பதற்கு "நினைப்பவரைக் காப்பது" என்பது பொருளாக அமைகின்றது.[82] மந்திரம் ஆற்றல் வாய்ந்ததாகத் தொன்மைக்காலத்திலேயே உணரப்பட்டது. அது சான்றோர் மெய்ம்மொழியாகிய வேதத்துடன் இணைத்து சித்திரிக்கப்பட்டது என்பதனை,

**"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திர மென்ப"**[83]

என வரும் தொல்காப்பிய நூற்பாவால் உணரலாம். வைதிக மரபிலும், சிவாகம மரபிலும் நிகழும் கிரியைகளுக்குரிய பொது அம்சம் மந்திர உச்சாடனமே ஆகும். இவ்வகையான சிறப்பினைத் தலபுராணங்களில் கண்டுகொள்ளமுடிகின்றது.

ஸ்ரீகைலாஸநாத புராணம் மார்க்கண்டேயரது வரலாறு கூறுகின்ற சந்தர்ப்பத்தில் பிரமா மார்க்கண்டேயருக்கு மகாமிருத்யுஞ்சய மந்திரத்தினை உபதேசித்தமையை மேல் வருமாறு கூறுகின்றது.

**"...தடைகண்டிடு பிரமன் னெதிர் தந்தானவன் செவியில்**
**அடைகொண்டிட மிருத்திஞ்செய மன்பாய் நனியோதி.."**[84]

என மந்திரத்தின் மகிமை பொருத்தமான சந்தர்ப்பத்தில் கூறப்பட்டுள்ளது.

தக்கன் வேள்வியின் போது இறந்த தேவர்களை எழுப்புவதற்காக விஷ்ணு விஸ்வசமக மந்திரத்தை உச்சரிக்க தேவர்கள் உயிர்பெற்று எழுந்ததாக ஸ்ரீகைலாஸநாத புராணம்,

"..விச்சுவ சமக மந்த்ரம்

மொழிந்தனன் கருணை பெற்றான் முராரியே யேனோருய்ந்தார்"[85]

என்பதன் மூலம் அறியமுடிகின்றது.

சிற்பங்களை உருவாக்கும் போது அவற்றின் தெய்வீகப் பொலிவினை விளங்கச் செய்வதற்கு சிற்பி தியான மந்திரங்களைத் தனது உள்ளத்திலே தியானித்தல் வேண்டும் எனச் சிற்ப நூல்கள் வலியுறுத்துகின்றன. சிற்பத்தை உருவாக்க முன்பு அவ்வாறு தியானம் செய்து அம்மந்திரங்கள் குறிக்கும் உருவத்தை தனது உள்ளக்காட்சியில் காணுதல் வேண்டும். தியானத்தின் பயனாய் உள்ளத்திலே தோன்றும் உருவத்தையே தனது கைவண்ணத்தின் மூலம் அவன் வெளிக்கொணர்வான். இத்தெய்வ உருவங்களை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்யும் சிவாச்சாரியர்களும் அதே தியான மந்திரங்களையே தியானித்து வழிபடுவர். இவ்வகையில் வழிபாட்டின் போது தியான மந்திரங்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

இறைவனை வழிபடுகின்ற சந்தர்ப்பங்களிலும் தெய்வங்களை உருவாக்கும் சந்தர்ப்பங்களிலும் தியான மந்திரங்கள் முக்கியத்துவமாக அமைகின்றன. இவற்றிற்கு அடிப்படையாக யோகம் விளங்குகின்றது. நோயிலிருந்து நீக்கம் பெறவும், மனஅழுத்தம் நீங்கவும், ஞாபகசக்தி அதிகரிக்கவும், சீரான இரத்தோட்டத்தை ஏற்படுத்தவும், மனம் தெளிவு பெறவும், தியானத்திற்கும் அட்டாங்கயோகம் வழிசமைக்கின்றது. தியானத்தை முன்னிறுத்தி இற்றைக்காலத்தில் யோகாசனங்களும், பிராணாயாமப் பயிற்சியும் முக்கியத்துவம் பெற்று விளங்குவது சுட்டிக்காட்டத்தக்கது. ஆலயக்கிரியை மரபுகளில் பூதசுத்தி, அந்தர்யாகம், போன்ற கிரியைகளில் ஆறு ஆதாரங்களின் வழி குண்டலினியை மேலெழச் செய்ய வழிபடும் மரபும், அகப்பூசை மரபும் புராணங்களில் காணப்படுகின்றமை ஒப்புநோக்கத்தக்கது.[86]

**விரதம்**

விரதம் எனும் சொல் கட்டளை, விருப்பம், ஆணை, ஒழுக்கம் எனப் பலவாறு பொருள்படும். இக்கருத்துக்களின் அடிப்படையில் உருவான விரதம் நாளடைவில் தனிவழிபாடாக விளங்கலாயிற்று. தூய்மையான சூழ்நிலையில் பக்தியை அடிப்படையாகக் கொண்டு கடைப்பிடிக்கப்படுவது விரதம் ஆகும். விரதங்கள் அடியார்களது மனத்தைத் தூய்மைப்படுத்துவதுடன் அவர்களுடைய உள்ளத்தை உயர்வடையச் செய்கின்றன. "விரதங்கள் தன்னை யொறுத்த சமயக்கிரியை"[87] என அக்கினி புராணம் குறிப்பிடுகின்றது. மனத்துணிவும், உறுதியும் கொண்டவர்கள் விரதத்தைப் பிடிப்பதற்குத் தகுதியானவர்கள் என்று கூறுவதுடன் அவர்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விரதங்கள், அவற்றின் ஒழுங்கு பற்றியும் அக்கினிபுராணம் விளக்குகின்றது.[88]

விரதங்களை காமிய விரதம், நிஷ்காமிய விரதம் என இருவகைப்படுத்தி நோக்கலாம். ஒரு குறிக்கோளை அவாவிச் செய்வது காமிய விரதம் என்றும், ஒரு பெறுபேற்றினை சிறிதும் கருதாது செய்யப்படுவது நிஷ்காமிய விரதம் என்றும் கூறப்படுகின்றது. விரதம் இருப்பவனுக்கு இன்றியமையாத நிலைக்களனாய் விளங்குவது உறுதியான பக்தியும், சிரத்தையுமாகும். இவைமட்டுமல்லாது பொறுமை, உண்மை, கொடை, தூய்மை, புலனடக்கம், உயிர்வதை செய்யாமை, அவாவின்மை, முதலியன கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய அம்சங்களாகும்.

> **"விரதம் என்பது மனம் பொறி வழி போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனுஞ், சுருக்கியேனும் மனம், வாக்குக் காயம் என்னும் மூன்றினாலுங் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதல்"**[89]

என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

ஈழத்தவர்கள் ஏகாதசி, சிவராத்திரி, கந்தசஷ்டி, சோமவாரம் ஆகிய விரதங்களின் மாண்பினை உணர்த்தும் புராணங்களைப் பாடியுள்ளனர். சுன்னாகம் அ. வரதபண்டிதரும், வட்டுக்கோட்டை நா. சிவசுப்ரமணிய சிவாசாரியாரும் ஏகாதசி விரத சிறப்பினையும், சுன்னாகம் அ. வரதபண்டிதர், நெல்லைநாதர், வட்டுக்கோட்டை நா.சிவசுப்ரமணிய சிவாச்சாரியார் ஆகியோர சிவராத்திரி விரத மாண்பினையும், மட்டக்களப்பு பண்டிதர் ச. பூபாலபிள்ளை – சோமவாரத்தின் மாண்பினையும்,வட்டுக்கோட்டை நா.சிவசுப்ரமணிய சிவாசாரியார் கந்தசஷ்டி, விநாயகசஷ்டி ஆகிய விரதங்களின் மாண்பினையும் புராணமாகப் பாடியுள்ளாரகள்.

புராணங்கள் கூறும் விரதங்களை மேலும் விளக்க எழுந்த நூல்களுள் ஹேமாத்ரி இயற்றிய சதுர்வர்க்ய சிந்தாமணி[90] என்னும் நூலும் விசுவநாதர் எழுதிய விரதசூடாமணி[91] எனும் நூலும் குறிப்பிடத்தக்கவையாகும். இந்நூல்கள் விரதம் தோன்றிய கதை, விரத நிர்ணயம், விரத முறைமை என்றவாறாக எண்ணற்ற விரதங்கள் பற்றி புராணங்களிலிருந்த செய்திகளை தொகுத்துக் கூறுபவையாக அமைகின்றது.

சிவாகமமரபிற்கு மேலாக புராணமரபுகளின் செல்வாக்கு அடிப்படையில் தவத்திற்கு நிகராக தம்மையொறுத்து இறைவனை வழிபடும் மரபு விரதவழிபாடாக அமைகின்றது. விரதவழிபாடு என்பது புராணங்களின் கருத்துப்படி இல்லங்களில் நிகழத்தக்க செயற்பாடுகளாகும். இவற்றிற்கான நியமங்கள் புராணங்களில் கூறப்படுகின்றன. சுமங்கலிகள் கணவன் நீண்ட ஆயுளுடன் வாழவேண்டும் என்பதற்காக சாவித்திரி விரதம், வரலக்சுமி விரதம் என்பவற்றை அனுட்டிக்கவும், விரும்பிய பலன்களும், வீட்டில் மங்கலங்கள் ஏற்படுத்துவதற்கு இருபத்தியொரு நாட்கள் தொடர்ச்சியாக கேதாரகௌரி விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. இதில் சாவித்திரி விரதம் பதிசஞ்சீலன விரதம் என அழைக்கப்படுகின்றது. பவிஷ்யோத்தர புராணம் கிருஷ்ணருக்கும் உதிஷ்டிரனுக்கம் இடையில் நிகழ்ந்த சம்பாசனையினூடாக

சாவித்திரி விரத்தின் கதையினைக் கூறுகின்றது. கேதார கௌரிவிரதம் சிவனிடம் சக்தி தனது சக்திதத்துவத்தை அடைவதற்க்காக அனுட்டித்த விரதமென பவிஷ்யோத்தர புராணம் கூறுகின்றது.[92] புத்திரப்பேற்றை பெறுவதற்காக நீராகாரம் எதுவுமின்றி ஆறு தினம் முருகனை நினைத்து கந்தசஷ்டி விரதம் அனுட்டிப்பதும், கன்னிப்பெண்கள் சிறந்த கணவனைப் பெறவேண்டும் என்பதற்காக மார்கழி மாதம் முழுவதும் திருப்பாவை விரதம் அனுட்டிப்பதும் குறிப்பிடத்தக்கது. விரதங்களின் நியமங்கள் எத்தகையது எனக் கூறும் அதேவேளை விரதங்களை எவ்வாறு நிறுத்துவது என்பது பற்றியும் புராணங்கள் கூறுகின்றன. உதாரணமாக சிவராத்திரி விரத உத்தியாபனம் கந்தபுராணத்தில் கூறப்படுகின்றது.[93]

விரதமகிமையை எடுத்துரைக்கும் புராணங்களில் விரதகாலம் பற்றிய தகவல்கள் அதனை அனுஷ்டிக்கும் முறை, அனுஷ்டித்தோர் அடையும் பயன், அவர்தம் விரிவான வரலாறு, அனுஷ்டிக்கத் தவறியோர் அல்லது நிந்தித்தோர் எய்திய துயரகதி, தெய்வஅருள் என்பன பற்றி விரிவாகப் பேசப்படுகின்றது. விரதபுராணங்களில் ஒன்றான வரதபண்டிதரின் பிள்ளயைார் கதை விநாயகசஷ்டி காலத்தில் இருபத்தொரு நாளும் பாராயணம் பண்ணப்பட்டு வருவது யாழ்ப்பாணத்து இந்துக்கோயிற் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கினை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. இவ்விரத புராணத்தின் செல்வாக்கினால் விநாயகசஷ்டி என்னும் விரதமானது "பிள்ளையார் பெருங்கதை" என்றே சுட்டிக்காட்டப்படுதல் கவனத்திற்குரியது.

ஐப்பசி வெள்ளி விரதம் முருகக் கடவுளைக் குறித்து சிறப்பாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

**"எள்ளருஞ் சிறப்பின் மிக்க எழுவகை வாரம் தன்னுள்**
**வெள்ளி நாள் விரதந்தானே விண்ணவருலகமங் காத்த**
**வள்ளறன் விரதமாகு மற்றது புரிந்த மேலோ**
**ருள்ளமே னினைந்த வெல்லா மொல்லையினை முடியுமன்றோ"[94]**

என ஸ்கந்தக் கடவுளின் விரதமாகச் சுக்கிரவார விரதத்தை

கந்தபுராணம் போற்றியுள்ளது. ஆறாம் நாள் சூரசமஹாரம் நிகழும் மரபு முருகன் ஆலயங்களில் மட்டுமன்றி பெரும்பாலன ஆலயங்களில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இக்கதை மரபை ஸ்காந்தமகாபுராணம் விரிவுபடக்கூறுகின்றது.[95] சமகாலத்தில் சிறுதெய்வவழிபாட்டு மரபுகளில் ஐயப்ப விரதம் மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்து வருகின்றது. சாஸ்தா எனும் தெய்வ மரபு புராணமரபில் ஹரிஹர புத்திரன் எனச்சுட்டப்படு கின்றது. இவ்விறைவனின் தோற்றம் மோகினி வடிவம் கொண்ட விஷ்ணுவுக்குப் பிறந்த குழந்தையாக ஸ்காந்தபுராணம் கூறுகின்றது.[96] இத்தகைய சாஸ்தாவிற்கான ஆலயம் சபரிமலையில் இருப்பதாக் கூறப்படுகின்றது. இம்மரபுகளை அனுசரித்து யாழ்ப்பாணத்திலும் ஐயப்ப பக்தர்கள் 45 நாட்கள் விரதம் அனுட்டித்து இந்திய யாத்திரைக்குச் செல்லுகின்ற மரபினையும் அவ்வாறு செல்லமுடியாதவிடத்து இருமுடிசுமந்து ஐயப்பன் ஆலயத்தில் விரதத்தினை நிறைவு செய்யும் மரபு பின்பற்றப்பட்டு வருகின்றமையினையும் அவதானிக்கமுடிகின்றது.

கிரகங்களின் சாந்தியின் பொருட்டு நவக்கிரக ஹோமம் செய்கின்ற முறைமையை அக்கினிபுராணம் எடுத்துக் கூறுகின்றது.[97] சமகாலத்தில் யாழ்ப்பணத்தில் சோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் தமக்கு ஏற்படுகின்ற கிரகதோசத்தை நிவர்த்தி செய்வதற்காக ஆலயங்களில் கிரகசாந்தி செய்யும் மரபு காணப்படுகின்றது. விரதங்களுக்குரிய காலவரன்முறைகளை புராணங்கள் வலியுறுத்திக் கூற அவற்றை பஞ்சாங்கங்கள் எமக்கு அறிவுறுத்துகின்றன. (பின்னிணைப்பு - 02)

**தோத்திரம்**

தோத்திரம் எனப்படுவது இறைவனின் பெருமைகளை, வீரதீர செயல்களை, திருவருட் சிறப்புக்களை வெளிப்படுத்திக் கூறுகின்ற இலக்கிய வடிவமாகும். சமஸ்கிருத மொழியில் யாப்பு, பாடல்களின் எண்ணிக்கை, தெய்வங்களின் சிறப்புக்களை அடிப்படையாக கொண்ட எண்ணற்ற தோத்திர வடிவங்கள்

காணப்படுகின்றன. இவற்றிற்கு உதாரணமாக ஆதியாசதகம் சூர்யசதகம், சிவானந்தலஹரி என்பவற்றைக்குறிப்பிடலாம். இதேபோன்று சுலோவடிவத்தில் தெய்வங்களின் பெயர்களின் அடுக்குகளாக 108, 300, 1000 என எண்ணிக்கைகளின் அடிப்படையில் தோத்திரமாகவும், இறைவனை அர்ச்சிப்பதற்குரிய நாமாவழியாகவும் தோத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சிவசகஸ்ர நாமம்[98] லலிதாசகஸ்ரநாமம். விஷ்ணுசகஸ்ரநாமம் ஆகியவை தோத்திர வடிவத்திலும் நாமாவளிவடிவத்திலும் மிகவும் பிரசித்தி பெற்றவையாகும். சிவசகஸ்ர நாமம் பத்மபுராணத்தில் ஒருவிதமாகவும், ஸ்காந்தபுராணத்தில் இன்னொருவிதமாகவும், சிவபுராணத்தில் வேறொருவிதமாகவும் இடம்பெறுகின்றது. அதேபோன்று கயக்கிரீவனுக்கும், அகத்தியருக்கும் இடையில் இடம்பெற்ற சம்பாசனை பிரமாண்டபுராணத்தில் இடம்பெறு கின்றது.[99] விஷ்ணு சகஸ்ரநாமம் மகாபாரதத்தில் வனபர்வத்தில் வீஷ்மரருக்கும், யுதிஷ்டிரனுக்கும் இடையே நடந்த சம்பாசனை யாக இடம்பெறுகின்றது இச்சகஸ்ரநாமங்கள் விநாயகர், சுப்பிரமணியர், நடராஜர், தட்சிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர் முதலான சிவவடிவங்களுக்கும் இராமர், கிருஷ்ணர், இரங்கநாதர், லக்சுமி முதலான தெய்வங்களுக்கும் இவற்றிற்கு மேலாக நவக்கிரக தெய்வங்களுக்கும் புராணங்கள் சகஸ்ரநாம தோத்திரங்களை கூறிநிற்கின்றன. மிகுந்த கருத்தாழம் மிக்க இத்தோத்திரங்களுள் அவற்றின் ஒழுங்கமைப்பின் சிறப்பினை நோக்குகையில் பாஷ்கரராஜரது சௌபாக்கிய பாஷ்கரம் எனும் லலித சகஸ்ரநாம பாஷ்சையமும், ஆதிசங்கரரது விஷ்ணு சகஸ்ரநாம லலிதா த்ரிசதி தோத்திர பாஷ்யமும் குறிப்பிடத்தக் கவை.

"அர்ச்சனையில் பத்திலொரு பங்கு ஹோமமும், ஹோமத்தில் பத்திலொரு பங்கு தர்ப்பனமும், செய்ய வேண்டும் என புராணங்களில் புரஸ்சரண விதி கூறுகிறது."[100] அம்மரபு யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்களில் ஒரு தினமோ பத்துத்தினங்களோ இலட்சார்ச்சனை நடைபெறும் மரபு காணப்படு

கின்றது. இதற்கு மேலாக ஒரு நாளுக்கு ஒரு இலட்சம் வீதம் நூறு நாட்களுக்கு ஒரு கோடி அரச்சனை யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்களில் நிகழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. 1974ஆம் ஆண்டு பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலயத்தில் மகாலக்சுமியை பிரதிஷ்டை செய்து நூறு நாட்கள் ஒரு கோடி நாம அர்ச்சனை நடைபெற்றமை நினைவு கூறத்தக்கது. கோப்பாய் பலானைக்கண்ணகியம்மன் ஆலயத்தில் 14.08.2017, திங்கட் கிழமை ஏகதின இலட்சநாம அர்ச்சனையும், ஹோமவழிபாட்டு பெருவிழாவும் இடம்பெற்றமை சிறப்பான அம்சமாகும். சுழிபுரம் பத்திரகாளியம்மன் ஆலயத்திலும் ஏகதின இலட்சநாம அர்ச்சனை வருடாவரும் இடம்பெறுகின்றது இவற்றிலும் மேலாக பௌராணிய முறைப்படி நவசக்தி அர்ச்சனை, சண்முக அர்ச்சனை என்பனவும் இடம்பெறுகின்றன. நயினாதீவு நாகபூசணி ஆலயத்தில தேர்த்திருவிழாவில் அன்று பச்சைசாத்தியதன் பின்னர் நவசக்தி அர்ச்சனை இடம்பெறுகின்றமையும் யாழ்ப்பாணத்து இந்துக்கோயிற் பண்பாட்டில் புராணங்களின் செலவாக்கினை தெளிவுற எடுத்துக்காட்டுகின்றன.

இச்சகஸ்ரநாமத்தினை அடிப்படையாகக்கொண்டு யாழ்ப்பாணத்து ஆலயங்கள் அனைத்திலும் அர்ச்சனைகளை ஒருவராகவோ ஐவராகவோ ஒன்பதின்மராகவோ ஒன்று சேர்ந்து அர்ச்சனையாகவும், பஞ்சமுக அர்ச்சனையாகவும், நவசக்தி அர்ச்சனையாகவும் அதற்கு மேலாக தொடர்ச்சியாக லட்ச அர்ச்சனை, கோடி அர்ச்சனை வரையாக நிகழ்த்தப்பட்டு வருகின்றமை புராணங்களின் தனித்துவமிக்க செல்வாக்கேயாகும்.

**பூசை**

இந்துக்கோயில்களில் தெய்வவடிவங்களுக்காக தினந் தோறும் நிகழ்த்தப்படும் கிரியையே பூசையாகும். ஆகமம் மிக விரிந்த நிலையில் கூறும் கிரியை மரபில் மிகச்சுருக்கமான நிலையே பூசை வழிபாடாகும். பூசை நிகழும் வேளை இறைவனுக்குச் செய்யும் உபசாரங்கள் பதினாறு வகையின. இது

சோடசோபசாரம் எனப்படும், பத்து வகைப்படும் உபசாரங்களைத் தசோபசாரம் என்றும், ஐவகை உபசாரங்களை பஞ்சோபசாரம் என்றும் கிரியை நூல்கள் கூறுகின்றன. புராணங்கள் விரத பூசைகளை எவ்வாறு பதினாறு விதமான உபசாரங்களுடன் நிகழ்த்தப்படவேண்டும் என்பதனை பிரயோகமுறைகளுடன் விளக்குகின்றன.[101] இவை விரதசூடாமணி, சதுர்வாக்ய சிந்தாமணி ஆகிய நூல்களிலும் காணப்படுகின்றன.

இறை சாந்நித்தியத்தை ஏற்படுத்துவதில் அலங்காரக் கலை இந்துக்கோயிற் பண்பாட்டில் முக்கிய இடம் பெறுகின்றது. இறைவன் மூர்த்தங்களுக்கு ஆடை, ஆபரணம், மாலைகள் என்பவற்றைச் சாத்தி அலங்கரிக்கும் சாத்துப்படிக் கலை சிவாலயக் கிரியைகளில் மிகவும் வளர்ந்து வருகின்றது. ஆரம்பத்தில் இப்பொருட்கள் இறைவன் திருவுருவுக்கு பக்தியோடு சமர்ப்பித்த நிலையிலிருந்து பின்பு திருவுருவத்தை தரிசிக்கின்ற பக்தர்களின் கண்ணும், மனமும் திருவுருவில் லயிக்கச்செய்ய வேண்டும் என்ற நோக்கில் இப்பொருட்கள் அழகுசாதனங்கள் கொண்டு கவர்ச்சியாக அலங்காரம் செய்யத்தொடங்கியபோதே சாத்துப்படிக்கலை சிறப்பாக தோற்றம்பெற்றது. பூசைக்கு பயன்படுத்தப்படுகின்ற தூபதீபங்களும் அலங்காரங்களுடன் கூடிய கலைத்துவமிக்கவையாக விளங்குகின்றன. தெய்வத்திருவுருவங்களை திருவீதி உலாக்கொண்டுவருவதற்கென பல்வேறு அலங்காரங்களால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சம், சப்பறம் தேர், முதலிய வாகனங்களும் சிறப்பிடம் பெறுகின்றன. இவ்வலங்காரக் கலை பற்றி புராணங்கள் குறிப்பிடுகின்றன.

அம்பாள் காது, மூக்கு முதலிய அங்கங்களில் அணிந்துள்ள ஆபரணங்கள் பற்றி மிகவும் சிறப்பாக ஸ்ரீகைலாஸநாத புராணம் வர்ணித்துள்ளது. இதனை,

**"சீரணி செம்முகச் செல்விநாசியி**
**னேரணி முத்தணி யிலங்குநத்து மேம்**
**கூரணிய ணிந்த மூக்குத்தி நெற்றியிற்**
**பூரணத்திலதமும் புனைந்து தீட்டினார்"**[102]

என்ற பாடல் தெளிவுபடுத்துகின்றது.

உள்ளத்தில் பக்திரசனையையும் கலாரசனையையும் ஏற்படுத்தி வருகின்ற முக்கியத்துவம் கருதி புராணங்களில் அலங்காரக்கலை சிறப்பித்துக் கூறப்படுகின்றது. பூசையில் முக்கிய நிகழ்ச்சி தீபாராதனை ஆகும். தினப்பூசையின் போது பல்வேறுவகையான அலங்காரமான தீபங்கள் இறைவனுக்குக் காட்டப்படுவதை ஸ்ரீகைலாஸநாதபுராணம் குறிப்பிடுகின்றது. புட்பதீபம், நாகதீபம், புருடதீபம், நட்சத்திரதீபம் முதலிய தீபங்கள் காட்டப்பட்டதனை ஸ்ரீ கைலாஸநாதபுராணம்,

**"..விரிதரு தூபதீபம் விளைத்தருக் கியமு நல்கிப்**

**பரிவுறு புட்ப தீபம் பயிறரு நாக தீபம்**

**விரிவுடைப் பு ருட தீபம் விளைந்த நட் சத்திர தீபம்"**[103]

என்ற பாடல் புலப்படுத்துகின்றது.

இறைவனுக்கு நிகழும் பூசையின் போது படைக்கப்படும் நைவேத்தியம் வழிபடுவோரது உள்ளத்தில் ஆத்மதிருப்தியை ஏற்படுத்துவதோடு ஆத்மசமர்ப்பணமாக விளங்குகின்ற காரணத் தால் இந்நிவேதனப்பொருளின் மேன்மை பற்றி புராணங்கள் சிறப்பிக்கின்றன. இறைவனுக்குப் பாகம்பண்ணிப் படைக்கப்படும் நைவேத்தியங்கள் பற்றி புராணங்கள் எடுத்துக்கூறுகின்றன. லிங்கபுராணத்தில் நிவேதனப்பொருள்களாக பாயாசம், சுத்த அன்னம், முத்த அன்னம் என்பவை சிறப்பாக கூறப்பட்டுள்ளது.[104]

இதுபற்றி ஸ்ரீகைலாஸநாதபுராணம் குறிப்பிடுகையில் ஒரு கொத்து அரிசி மா, பருப்பு, சர்க்கரை, மூன்று தேங்காய்த் துருவல் என்பன நிவேதனத்திற்குரிய பொருட்களாகக் குறிப்பிடுகின்றது. இதனை,

**"ஒரு நாழியரிசி மாவும் முரியொன்றாம் பருப்பு மேலுந்**

**தெரியுமொன்றரைப் பலந்தான சேர்ந்த சக்கரையே தேங்கா**

**திரு மூன்றின்றுருவல் சேர்த்துச் செய்த மும்மோதகஞ்சீர்.."**[105]

எனும் பாடலால் அறியலாம்.

பூசைகளில் அர்ப்பணிக்க வேண்டிய பலகார வகைகள் பற்றி குறிப்பிடும் போது ஸ்ரீகைலாஸநாதபுராணம்,

"சொல்லிய பயறுமுந்து துதிதருகடலையௌ்ளு
வல்லவொவ்வோர் பிடிக்கண் வதிந்த சர்க்கரை தேங்காய்
புல்லிய துருவல் நெல்லிற் புனைபிடி யொன்று மாகச்
சொல்லுயர் நந்தி பூசை துதி முதலான முற்றி."[106]

என்ற பாடல் பாகம் பண்ணும் கலைபற்றி வர்ணிக்கின்றது.

ஈழத்துச்சிதம்பர ஆலயத்தில் திருவமுதையும், பணிகார வகைகளையும் உப்பின்றி செய்யும் வழக்கம் காணப்படுகின்றது. இதனை,

"திருவமுதைப் பணிகார வகை தம்மை
யுப்பின்றிச் செய்வார்.."[107]

எனும் ஈழத்துச்சிதம்பர புராண பாடல் மூலம் அறியமுடிகின்றது.

ஸ்காந்தபுராணத்தில் பார்வதிக்கு சிவன் கூறிய விரதமாக வரலக்சுமி விரதம் கூறப்படுகின்றது. விரதங்கள் அனைத்திற்கும் பொருத்தமான அம்சங்கள் காணப்படினும் புராணங்கள் தமக்கேயுரிய தனித்துவத்தினையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இதற்கு உதாரணமாக வரலக்சுமி பூசையில் வைக்கப்படும் கும்பத்திற்கு நீருக்குப் பதிலாக தானியத்தை நிறைத்தல் என்பது தக்க உதாரணமாகும்.[108] இன்று யாழ்ப்பாண மக்களிடையே பிரபலயமடைந்து வந்துள்ள அட்சய திருதியை பற்றிய குறிப்பு பவிஷ்ய புராணத்தில் இடம் பெறுகின்றது.[109] இறைவனுடைய உபசாரப்பொருட்களில் மலர்கள், இலைகள் முக்கியமானவை. இவைபற்றிய செய்திகளை புராணங்கள் எடுத்துக்கூறுகின்றன. லிங்கபுராணம் பதினாறு வகையான இலைகள், மலர்கள் கொண்டு பூசிக்கும் முறைபற்றி கூறுகின்றது.[110] எத்தகைய தெய்வங்களுக்கு எத்தகைய மலர்கள், இலைகள் சிறப்பானவை என்பதையும் லிங்கபுராணம் குறிப்பிடு கின்றது.[111]

ஆலயவழிபாட்டில் மலர் கொண்டு இறைவனை வழிபடும் முறை சிறப்பாகக் காணப்படுகின்றது. இதனைத் தலபுராணங்கள் புலப்படுத்துகின்றன. மலர் கொண்டு வழிபடுவதனால் முத்திப்பேறு கிடைக்கும் என்பது தலபுராணங்களில் தெளிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பிறவியிலே நல்ல பயன்களைப் பெற்று

உயர்ந்த சிவலோகத்தை அடைவதற்குரிய வழிகளில் ஒன்றாக மலர் வழிபாட்டை நகுலகிரிப்புராணம் குறிப்பிடுகின்றது. இதனை,

"..செம்ம லர்கொடே சேவடி யருச்சனை புரிந்து
மும்மலந்தனை யகற்றுநற் றவந்தனை முயன்றே
இம்மை யோடுயர் கதிதனை யெளிதினி லுறுவார்"[112]

என்பதால் அறியலாம்.

சைவ வழிபாட்டு மரபில் தாழம்பூ தவிர்ந்த ஏனைய மலர்கள் பயன்படுத்தப்படும். இதனை ஈழத்துச்சிதம்பர புராணம்,

"..தாழை நீங்கிய தண்டலைப் பூக்களில்
வாழி வண்டுத ளுதி மலர்த்துமால்"[113] என்கிறது.

"தாழம்பூ நீக்கவேண்டிய புட்பங்களில் ஒன்று."[114] எனக் காமிகாகமம் குறிப்பிடுகின்றமை ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

துளசியானது மகாவிஷ்ணுவுக்கு மிக உகந்தது என்பதனை பத்மபுராணம் குறிப்பிடுகின்றது.[115] மகத்தான மருத்துவக் குணங்களையுடைய சிறப்புடையது. மகாவிஷ்ணு துளசி மாலையை முடியில் அணிந்தவர் என்பதனை நகுலகிரிப்புராணம்,

"..வண்டு முரய்முடிக் கரியவன.."[116] என்று குறிப்பிட்டுள்ளது.

சிவந்த மலர்மாலையை பைரவர் கடவுள் அணிந்தமையினை ஈழத்துச்சிதம்பர புராணத்தில் வரும்,

"..பிரசச் செந்தொடைப் பிள்ளையின் சேவடி
தூரிசு போம்படி சென்னியிற் சூடுவாம்"[117]

எனும் பாடலால் அறியலாம். மலர்களின் வண்ணமும், வடிவும் நிறமும் இறைவனின் கோல அழகுக்கு அணிசெய்ததை நோக்கமுடிகின்றது.

இறைவனுக்குச் செய்யப்படும் உபசாரப் பொருட்களில் தூர்வை (அறுகம்புல்) முக்கிய இடத்தைப் பெறுவதை தலபுராணங்களில் கண்டுகொள்ளலாம். இதனை,

"...சாந்த மலர்வகை தூர்வை யிண்டை..."[118] எனவும்,

"..சந்தன மக்கதம் மேற்தகு தூர்வை திருவின்புட்ப."[119]

எனவும் கூறுவதால் அறிந்து கொள்ளலாம்.

உபசார வழிபாட்டில் பாவனை வழிபாடு முக்கியமான தொன்றாக விளங்குகின்றது. பாவனை என்பதற்கு நினைவு, தெளிகை, தியானம், தியானிக்கப்படுவது, அடையாளம், போலி, நடத்தை எனப் பல பொருள் கூறுப்படுகின்றது.[120] திருக்கோயில் களில் செய்யப்படும் விழாக்கள் எல்லாம் இறைவன் உயிர்களுக்கு அருளிச்செய்யும் திருவருட் செயல்களை உணர்த்தும் பாவனைகள் ஆகும். பாவித்தல் என்பது கருதிக்கொள்ளுதலாகும்,"தானு மதுவாகப் பாவித்து" எனப் பொருள் கொள்ளலாம். இலங்கைத் தலபுராணங்களில் பாவனை வழிபாடு பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளமுடிகின்றது.

திருக்கோயிற்கிரியைகளில் சோடச உபசாரங்களில் பதினான்காவது உபசாரமாக கீதம், வாத்தியம், என்பன இடம்பெற்ற பின்னர் பதினைந்தாவது உபசாரமாக நிருத்திய உபசாரம் இடம்பெறுதல் வேண்டும் எனப் பூஜாபத்ததியில் கூறப்பட்டுள்ளது.[121] தௌர்யத்திரிகம் என்பது நிருத்தியம், கீதம், வாத்தியம் எனும் மூன்றினையும் தொகுத்துச் சுட்டும். இம்மூன்றாலும் இறைவனை வழிபட வகுக்கப்பட்ட முறை இந்நுண்கலைகளைப் பேண திருக்கோயில் வழிபாடு வழிகோலி யதைக் காட்டுகின்றது.

யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்களிலே நடைபெறும் வழிபாட்டின் போது இறைவன் சன்னிதியில் ஓதப்படும் பஞ்சபுராணங்களிலே இடமபெறும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த தொகுப்பு புராணம் என்ற சொல்லினால் போற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். திருமுறைப்பாடல்க்ள் திருக்கோயில் களில் பஞ்சபுராணம் எனும் பெயரிலோ அல்லது திருமுறைப்

பாடல்கள் என்ற பெயரிலோ இடம்பெறுவதற்குத் புராணங்களின் தாக்கமே காரணம் எனலாம். சிவசம்பந்தமாய் தலபுராணங்களில் திருமுறைப்பாடல்களுக்கும் பெருமதிப்புக் கொடுக்கப்பட்டிருப் பதையும் அவை திருத்தலங்களில் பாடவேண்டும் என வற்புறுத்தப்பட்டிருப்பதையும் நோக்கமுடிகிறது. புராணப் பிரவசனம் கோயில்களில் இருந்தமையினால் அங்கு பாடும் பதிகங்களுக்கு புராணம் பாடுதல் எனும் பெயர் பெருமை தரும் எனும் எண்ணத்தில் பஞ்சபுராணம் பாடுதல் என்ற சொல்லாட்சி தோன்றியிருக்கக்கூடும் என்பது அறிஞர் கருத்தாக உள்ளது.

அம்பாள் பூசைக்குரிய வாத்தியங்கள் பாடவேண்டிய பண்கள் பற்றியும் ஸ்ரீகைலாஸநாத புராணம் குறிப்பிடுகின்றது. இதனை

**"சாரங்கிகுழல் துத்தாரி தவண்டை மத்தள சல்லாரி**
**வீரங்க மிருதங்கம் மேல் வெண்கலத்தவண்டை வீணை**
**ஏரங்கடக்கை பேரிடக்கையா மந்திரியாதி**
**சீரங்கவாத்தியங்கடிசை திசை யோசை பம்ப."**[122]

**"மகர யாழுதனின் மேலே வளர்தேவி காந்திரிப்பேர்**
**பகரமார் நட்டபாடை பரவு கேதாரகௌல்லி."**[123]

என்பதால் அறியலாம்.

கர்நாடகஇசை சிறப்பாக இருந்த காலத்தில் தமிழ்ப்பண் முறைப்படி தேவாரபாராயனம் செய்யும் மரபு இருந்துள்ளதனை காணமுடிகின்றது. தலபுராணங்களில் பண் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. குறிப்பாக சாதாரிப் பண் பற்றி ஸ்ரீகைலாஸநாதபுராணம் குறிப்பிடுகின்றது. இதனை,

**"....மீட்டிச் சாதாரி பாட**
**புகுத்தனன் பாடுமெல்லை புகழ் சுதி யீசன் காதில்"**[124]

எனும் பாடலால் விளக்குகின்றது.

பஞ்சவாத்தியங்கள் ஒலிப்பதன் நோக்கம் பற்றி ஸ்ரீகைலாஸநாத புராணம் குறிப்பிடுகையில் பூதம், பிசாசு,

கணங்களை நீக்குவதற்காகவே ஒலிக்கப்படுவதாகக் கூறுகின்றது. இதனை,

> **"..பஞ்ச வாத்ய கோட**
> **சத்தது மாகண்டைச் சீரச சத்தங்கேட்டிடு தன் மாத்ரை**
> **மொத்துறு பூதப் ரேத முயரும் ராட்சத பைசாச**
> **தத்துவானவரே யாதி சார்பீடை யெனைத்துத் தீரும்"**[125]

என்பதால் அறியலாம்.

பரதநாட்டியத்தில் பயின்று வரும் பல முத்திரைகள் கிரியைகளிலும் அதே பெயர்களைக் கொண்டு அதே கையமைதிகளில் பிரயோகம் பெறுவது சிந்திக்கற்பாலது.இவை பரார்த்தபூசை நிகழ்த்துபவரிடையே வளருதற்குரிய கலையாகும். ஆத்மார்த்த பூசையுடன் மிகச் சிறு அளவில் இது தொடர்பு பெறுவதுண்டெனினும் பரார்த்த பூசையிலேயே இதன் தேவையும் அதையொட்டி இதன் வளர்ச்சியும் பெருகுகின்றன.கலைஞன் முகபாவங்களால் வரவழைக்கும் பாவனைகளை மேலும் நிறைவு செய்ய அவனுக்கு அனுசரனையாக இருப்பவை முத்திரைகள் ஆகும். கருத்துக்களுக்கு வடிவம் தரும் முத்திரைகள் ஒருகலையாக நெறிப்படுத்தப்பட்டு இன்ன கருத்து இன்ன வகையில் அமையும் கையமைப்பால் உணர்த்துவதற்குரியது எனச் சாஸ்திர ரீதியாக வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நெறிப்படுத்தப்பட்ட முத்திரைகள் கிரியைகளில் பெரிதும் பயிலும் அம்சமாக விளங்கக் காண்கிறோம். இதனால் திருக்கோயிற் கிரியைகளில் பயன்படுத்தப்படும் முத்திரைகளை புராணங்கள் பதிவு செய்துள்ளன. அக்கினி புராணம். கிரியைகளின்போது முத்திரை பிரியோகம் எவ்வகையில் அமைய வேண்டும் என்பதனை விபரமாக கூறுகின்றது.[126]

**புராணபடனம்**

புராணமொன்றை ஒருவர் இசையோடு பாட மற்றொருவர் இசையோடு பொருள் விரித்துக் கூறுவது புராணபடனம் ஆகும். மக்களுக்குச் சமயச் செய்திகளையும், அறிவுபதேசங்களையும்

கொண்டு செல்லும் சிறந்த அறிகை விருத்தி ஊடகமாக இச்செயற்பாடு விளங்குகின்றது.

கந்தபுராண நூலை கோயில்களிலும், வீடுகளிலும், தவறாது படித்து கந்தபுராணத்திற்கு பொருள் சொல்பவர்களும் அதனைக்கேட்டு மகிழ்பவர்களும் திண்ணபுரத்தில் இருந்தனர் என்பதனை ஈழத்துச்சிதம்பர புராணம்,

**"முப்பொருளின் றன்மைகளு மியைபுகளு**
**முடிவிலின்ப மூழ்கு மாறுஞ்**
**செப்புமொரு சிவகதையிற் பொதிந்து கவி**
**தித்திக்கச் செய்த கந்தன்**
**மெய்ப்புராண விழுப்பனுவல் தனையன் பாற்**
**கோயில் தொறும் வீடு தோறும்**
**எப்போதும் படித்துப்பய னுரைப்பாருங்**
**கேட்பாரு மெங்கு முண்டாம்."**[127]

எனக்குறிப்பிடுகின்றது.

ஈழத்துச்சிதம்பரத்தில் சரவணபவக் குருக்களது முயற்சி யால் சிவபுராணப் படிப்பு இடம்பெற்றதாக ஈழத்துச்சிதம்பர புராணம் குறிப்பிடுகின்றது. இதனை,

**"..தூயசிவ புராணங்க ளோதியடி**
**யவர்பூசை துலங்கச் செய்தான்."**[128]

என்ற அடிகள் புலப்படுதுகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான ஆலயங்களில் விசேடநாட்களின் போது பிள்ளையார் கதை, சித்திரபுத்திரனார் கதை, பசுவின் கதை முதலியவற்றை படித்தல் இடம்பெறுகிறது. விநாயகர் ஆலயங்களில் விநாயகர் சஷ்டி விரதத்தின்போது பிள்ளையார் கதையும், சித்திரா பூரணையின் போது சித்திரபுத்திரனார் கதையும், வைகாசி விசாகத்தன்று கோவலனார் கதையும் ஒருவித ஓசை ஒழுங்குடன் படிக்கப்பெற்று வருவதை இன்றும் காணமுடிகின்றது.

யாழ்ப்பாணத்துக் கோயில்களிலே புராணபடனம் தொடங்கும் போது அவ்வாலயத்தின் சிவாச்சாரியாரே காப்புச் செய்யுளைப் படித்து முதலாவதாக ஒரு செய்யுளையும் வாசித்துப் புராணபடனத்தைப் தொடங்குவதும் பின்னர் புராணபடனம் நிறைவு பெறும் பொழுது காப்புச் செய்யுளைப் படித்து நிறைவு செய்தலும் இன்றும் வழக்கமாக உள்ளது.

யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்களிலே வருடத்தில் மூன்று மாதங்கள் (பெரும்பாலும் ஆனி, ஆடி, ஆவணி) கந்தபுராண படனம் நடைபெறுவது வழக்கமாக இருந்துவருகின்றது. யாழ்ப்பாணத்தின் பிரசித்தி பெற்ற கோயிலான தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் பங்குனிமாதம் தொடக்கம் கந்தபுராணம் படித்துப் பயன் சொல்வது இன்று வரை நடைபெறுகிறது. அத்துடன் இவ்வாலயத்தில் பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றைப் படித்துப் பயன் சொல்லும் வழக்காறும் உண்டு.

திருவெம்பாவைக் காலத்தில் திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பயன் சொல்லும் வழக்கம் இன்றும் உள்ளது. திருவெம்பாவை முதலாம் நாளில் படிக்கத் தொடங்கி திருவாதிரையன்று புராணபடனத்தை பூர்த்தி செய்வர். யாழ்குடாநாட்டில் உள்ள விஷ்ணு ஆலயங்களில் ஏகாதசித் தினத்தன்று இரவு முழுவதும் ஏகாதசிப் புராணப்படிப்பு நடைபெறுகிறது. வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயம், பொன்னாலை வரதராஜர் பெருமாள் கோயில், வண்ணார்பண்ணை பெருமாள் கோயில் ஆகிய தலங்களில் இப்புராணம் படித்து பயன் சொல்லப்படுகிறது.

**நிறைவுரை**

இந்துசமுதாயத்தில் நிலைபெற்றுவிட்ட சமய நிறுவனங் களான திருக்கோயில்கள், இந்துப் பண்பாடு காலந்தோறும் செவ்விதாக்கம் அடைவதற்கும் நிலைபேறடைவதற்கும் அளப்பரிய

பங்கினையாற்றி வந்துள்ளன. குறிப்பாக இலங்கையில் 'இந்துக்கோயில்களின் நகரம் யாழ்ப்பாணம்'எனச் சுட்டித்துக் கூறப்படும் வகையில் இந்துப்பண்பாட்டின் மறுமலர்ச்சிக்கும், இருப்புக்கும் இவை பெருஞ்செல்வாக்கினைச் செலுத்தியுள்ளன. அவ்வாறே இந்துப்பண்பாட்டினைப் பல்வேறு பரிமாணங்களூடாக அழைத்துச் சென்றபெருமைக்குரியனவாகக் காணப்படும் இலக்கியவகைமையில் புராணங்களும் முக்கியம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

புராண இலக்கியங்கள் பலவகைமைகளில் காணப் பட்டாலும், அவை வரலாற்றுநிகழ்வுகள் மூலம் அறிவியற் புலத்தினூடாக கருத்தியல் சிந்தனைகளை முன்வைத்தன. இவ்வாறுபுராணங்கள் பொருண்மையாக விரித்துரைக்கும் விடயங்கள் வளருறுப் பெற்று வந்துள்ளமைக்கு திருக்கோயில் களே சான்றுப்பொருட்களாக உள்ளன. பல்லவர் கால பக்தி இயக்க செயற்பாட்டாளர்கள் திருக்கோயில்களை முன்னிறுத்தியே புராண கதையாடல்கள் மூலம் மக்களிடையே நம்பிக்கையை வளர்த்தெடுத்து சமுதாயத்தை வளம்படுத்த முனைந்தனர். இதனடிப்படையில் தென்னிந்தியப் பண்பாட்டுக் கருவூலங்களாக வடமொழிப் புராணங்கள் அமைந்தன என்றகருத்து அறிஞர் களிடையே நிலவி வருகின்றது. யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுச் செல்நெறியின் வளர்ச்சியிலும் தொடர்ச்சியிலும் வடமொழி மற்றும் தமிழ்மொழிப் புராணங்களின் செல்வாக்கினை பல்பரிமாணங்களில் அவதானிக்க இயல்கின்றது. இதனடிப்படையில், 'புராணங்கள் யாழ்ப்பாணத்து இந்துப் பண்பாட்டின் கருவூலங்கள்' எனக் கூறத்தக்க வகையில் இந்துப்பண்பாட்டுக் கூறுகள் ஒவ்வொன்றிலும் அவற்றின் செல்வாக்கினை உணரமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

01. www.statistics.gov.lk
02. **Tamil Lexicon,** Vol-05, P.2772.
03. கந்தசாமி,சோ.ந.,"புராணங்களின் படிப்பினைகள்", **இந்துஒளி**, பொன்விழா சிறப்பு மலர், அகில இலங்கை இந்துமா மன்ற வெளியீடு, ப.298.
04. ஜகந்நாதன், கி.வா.,**கந்தபுராணச்சிந்தனை**, திருமகள் அச்சகம் சுன்னாகம், அணிந்துரை.ப.V.
05. **அமரகோசம்,** சப்தாதிவர்க்கம், 5.
06. **பாகவதபுராணம்**,XI- 7.9-10.
07. கோபாலகிருஷ்ணஐயர், ப., (1992) **இந்துப்பண்பாட்டு மரபுகள்**, ப.62.
08. **சூதசம்ஹிதை**, 1.7-18.
09. பாண்டுரங்கன், அ.,(1992)**காப்பிய இயல்** தமிழரங்கம், புதுச்சேரி ப. 54.
10. பத்மநாதன், **சி.,ஈழத்து இலக்கியமும் வரலாறும்,** குமரன் புத்தக இல்லம் ப.138.
11. மேலது, ப.138.
12. மேலது, ப.138.141.
13. **ஈழத்துச்சிதம்பரபுராணம்**, பதிப்புரை, ப. XXV.
14. கைலாசநாதக்குருக்கள், கா., 1960, புராணங்கள் தென்னாட்டின் சமயக்கருவூலம்", **சிவஸ்ரீ.ச.குமாரசுவாமிக் குருக்கள் பாராட்டுவிழாமலர்**, ப.96.
15. கைலாசநாதக்குருக்கள்,கா.,(2009)**சைவத்திருக்கோயிற்கிரியை நெறி,** ப.8.
16. பொன்னுஸ்வாமி, ச.,(பதி.ஆ.),(1954)**ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு** முதற்பாகம், ப.168.
17. **ஸ்ரீபரார்த்தநித்திய பூஜாவிதி,** (1966) பக்.40 – 44.
18. **திரிகோணாசலபுராணம்**, பூசனைப் படலம்,பா.எ.4.
19. நடராசன்.சோ.,(1967),**வடமொழி இலக்கியவரலாறு,** செம்மொழிக்காலம், கல்விவெளியீட்டுத் திணைக்களம், ப.32.

20. Gayana.S.D., (1964), **Agni-Purana – A Study**, Chowkhamba Sanskrit Series office.
21. Hazre.R.S. (1987),**Studies in the PuranicRecords on Hindu Rites and Customs**, MotilalPanarsidass, madras.
22. Patanai.B, (1980),**Sivapurana A Poetic Analysis**,At Vishal printing Press Delhi.
23. Rukmani,T.S. (1970), **A Critical study of the bhagavata Purana**,Chowkhamba Sanskrit Series office. Vatanasi -1
24. Gangadharan,N., (1980), **Lingapurana A study**,Ajnta publication.
25. Awasthi.A.B.L., (1976), **Studies in SkandaPurana, Part I**(Geography, History, Polity & Society),kailashPrakashan, Luckanow.
26. Kailasanathakurukkl.,K. (1960), **A Study of Saivism of the Epic and Puranic periods, together with its ancillary cults with special reference to saiva religious practices prevalent in south India and Ceylon**.submitted to the University of Poona for the Degree of Doctor of Philosophy (Unpublished Thesis).
27. வேதநாதன்.மா., (2002), **கந்தபுராணத்தில் சைவசித்தாந்தக் கோட்பாடுகள்,** தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திற்கு முனைவர் பட்டத்திற்குசமர்ப்பிக்கப்ட்ட ஆய்வேடு, (பிரசுரிக்கப்படாதது)
28. மாதவன்வே. இரா., (1995), தமிழில் தலபுராணங்கள், (முதற் பகுதி),பாவைவெளியீட்டகம்,தஞ்சாவூர்.
29. கிருஷ்ணசாமி.வே,.(1974), **தமிழில் தலபுராண இலக்கியம்,** முத்துசாமிபுரம். நெல்லைமாவட்டம்.
30. செல்வரஞ்சிதம்.,சி. (1995),கி.பி 1100க்கம் கி.பி 1600க்கும் இடைப்பட்டகாலத்தில் எழுந்த சைவப்பேரிலக்கியங்களுள் கந்தபுராணம் பெறும் இடம், யாழ்ப்பாணப் பல்கலைகழகத்திற்கு முதுகலைமாணிபட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு. (பிரசுரிக்கப்படாதது)
31. கிருஷ்னானந்தசர்மா. ஸ்ரீ. (2005), **இலக்கியநோக்கில் அக்கினி புராணம்** - ஒரு நுண்ணாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைகழகத்திற்கு முதுகலைமாணிபட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு. (பிரசுரிக்கப்படாதது)

32. சுகந்தினி.சி. (2014), **இலங்கையில் தோன்றியதலபுராணங்கள் புலப்படுத்தும் சைவப்பண்பாடு.. ஓர் ஆய்வு,** யாழ்ப்பாணப் பல்கலை கழகத்திற்கு கலாநிதிப் பட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு. (பிரசுரிக்கப்படாதது)
33. கோபாலகிருஷ்ணஐயர்,ப.,(1992), **இந்துப்பண்பாட்டு மரபுகள்,** வித்தியா வெளியீடு, யாழ்ப்பாணம்.
34. மனோன்மணிசண்முகதாஸ், லலீசன். ச,. (தொ.ஆ) (2010), **பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு–சென்னை.
35. ஜகந்நாதன்,கி.வா,. (1972),கந்தபுராணச்சிந்தனை, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
36. ஞானசம்பந்தன் அ.ச.,(1999), **பெரியபுராணம் ஓர் ஆய்வு,** கங்கை புத்தக நிலையம், சென்னை.
37. Pusalkar.A.D., (1955), **Studies in the Epics and Puranas,** Bombay
38. Vettam Mani (1975),**Puranic Encyclopedia,** A Comprehensive work with special Reference to the Epic and Puranic Literature, JainendraPrakash Jain At Shari , Jainendra Press, Delhi.
39. Winterniz. M., (1963), **A History Indian Literature,** Vol -1, Part -11, (Epics and puranas), University of Calcutta.
40. பக்தவற்சலபாரதி.,(2003)**பண்பாட்டுமானிடவியல்,** ப.151.
41. Panikkar, K.M.,(1974) **Essential Features of Indian culture,** P.2.
42. கோபாலகிருஷ்ணஐயர், ப., (1992).,மு.கு.நூ.,ப.2.
43. **நகுலகிரிப்புராணம்**.,(1980)நகுலமுனியாத்திரைப்படலம்., பா.எ.30.
44. **லிங்கபுராணம்** 1.30
45. **காரணாகமம்** 2.84,**காமிகாகமம்** 2.57.
46. **கூர்மபுராணம்**,I.12.27-29,**லிங்கபுராணம்** 1.41. I, I.5.28,**மத்ஸ்யபுராணம்** 260.1-10
47. Vettam Mani (1975),**Puranic Encyclopedia,** P.166,
48. Vettam Mani (1975),**Puranic Encyclopedia,** PP.308-309
49. **லிங்கபுராணம்,** 76.17, 113.26.
50. **காரணாகமம்,** 2.65.

51. **ஸ்ரீகைலாசநாதபுராணம்**.,(2010)வரலாற்றுச்சருக்கம்., பா.எ.61.
52. **ஸ்ரீகைலாசநாதபுராணம்**.,(2010)ஆலயநிருபணச்சருக்கம்., பா.எ.53.
53. **ஸ்ரீகைலாசநாதபுராணம்**.,(2010)ஆலயநிருபணச்சருக்கம்.,பா.எ.7
54. **ஈழத்துச்சிதம்பரபுராணம்**., (1972)ஐயனார்கோயில் காண் சருக்கம்., பா.எ.47.
55. **தட்சணகைலாசபுராணம்**, திருநகரச்சருக்கம், 18.
56. சிவலிங்கராஜா எஸ், (2001) **ஈழத்து தமிழ் இலக்கியம் செல்நெறி** (19ஆம் நூற்றாண்டு வரை) தனலக்குமி புத்தகநிலையம், யாழ்ப்பாணம், ப.20
57. **தட்சிணகைலாசமகாத்மியம்,** உத்தரகாண்டம். 14.12-19
58. கோபாலகிருஷ்ணஐயர்,ப.,(1992) மு.கு.நூ ப.7.
59. **திருவாசகம், திருவெம்பாவை**,13.
60. **லிங்கபுராணம்**, 76.55-58
61. **தேவிபாகவதம்** -09.
62. **அக்கினிபுராணம்** -110.
63. **நகுலகிரிப்புராணம்**.,தீர்த்திகைப்படலம்., பா.எ.10.
64. **நகுலகிரிப்புராணம்**.,தீர்த்திகைப்படலம்., பா.எ.63.
65. **திரிகோணாசல. புராணம்**.,திருநாட்டுப்படலம்., பா.எ.42.
66. Vettam Mani (1975),**Puranic Encyclopedia**, P 881
67. முத்தையாபட்டர்.மு.,(1959)**கும்பாபிஷேக கிரியாக்கிரம விளக்கம்,** சிவாகமபாடசாலை, திருச்செந்தூர், 11.08.1959, ப.65.
68. **ஈழத்துச்சிதம்பரபுராணம்**.,விழாவயர் சருக்கம்., பா.எ.54.
69. **ஸ்ரீகைலாசநாதபுராணம்.**,யமகாவாபகாரச் சருக்கம்., பா.எ.15.
70. **நகுலகிரிப்புராணம்.**,தலவிசேடமுரைத்தபடலம்., பா.எ.36.
71. **நகுலகிரிப்புராணம்.**,தலவிசேடமுரைத்தபடலம்., பா.எ.12.
72. **ஈழத்துச்சிதம்பரபுராணம்.**,காரைவளச் சருக்கம்., பா.எ.6.
73. **ஸ்ரீகைலாசநாதபுராணம்**.,ரதோற்சவச்சருக்கம்., பா.எ.34.
74. கணபதிப்பிள்ளை,பண்டிதமணி,(1994)**கைலாசபதி சிந்தனைகள்,** யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு ப.103.
75. **லிங்கபுராணம்,** 1.8.76-84.
76. **லிங்கபுராணம்** 2.8.91-102.

77. **லிங்கபுராணம்,** 1.86.120.
78. **லிங்கபுராணம்** 1.86.114 – 119.
79. **லிங்கபுராணம்** 1.85.33
80. **லிங்கபுராணம்,**1.35 18-25
81. **சிவபுராணம்** 2.9.50,**லிங்கபுராணம்** 1.8.90-91
82. ஆறுமுகநாவலர், ஸ்ரீலஸ்ரீ., (1974) **இரண்டாம் சைவவினாவிடை,** கூட்டுறவுத் தமிழ் நூற்பதிவு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம், ப.31.
83. **தொல்காப்பியம்,**பொருளதிகாரம், 190.
84. **ஸ்ரீகைலாசநாதபுராணம்**.,யமகாவாபகாரச் சருக்கம்., பா.எ.42.
85. **ஸ்ரீகைலாசநாதபுராணம்**.,யமகாவாபகாரச் சருக்கம்., பா.எ.103.
86. **பிரமாண்டபுராணம்**,லலிதாசகஸ்ரநாமம், சு.98-110
87. Haridass Bhattacharyya (ed.), **The Cultural Heritage of India,** Vol .ii. "The purana" The Ramakrishna Mission Institute of culture, Calcutta, p.297
88. **அக்கினிபுராணம்,** அத்.175-200
89. ஆறுமுகநாவலர்,ஸ்ரீலஸ்ரீ.,1974 மு.கு.நூ, ப.80.
90. Hemadri, (1879), **ChaturvargaChintamani,**Vol II, Part II, Calcutta.
91. நாராயணசாஸ்திரி,மா. (பதி), (1911),**விரதசூடாமணி**, சாரதாவிலாசமுத்திராட்சசாலை, கும்பகோணம்.
92. **விரத சூடாமணி,**பக். 513-517
93. **விரத சூடாமணி,** பக்316-318.
94. **கந்தபுராணம்**,கந்தவிரதப்படலம்,பா. எ. 3
95. **ஸ்காந்தமகாபுராணம்**,சம்பவகாண்டம், 39-46
96. **PuranicEncyclopaedia,** A Comprehensive work with special Reference to the Epic and Puranic Literature p.700
97. **அக்கினிபுராணம்,**அத். 164
98. **லிங்கபுராணம்,** 1-98
99. **பிரமாண்டபுராணம்**,லலிதாசகஸ்ரநாமம்,உத்தரகாண்டம்.
100. **விரத சூடாமணி** வில்வபத்ரபூஜாவிதி, பக் 486-489
101. **அக்கினிபுராணம்,** 155
102. **ஸ்ரீகைலாசநாதபுராணம்.,** திருக்கல்யாணச்சருக்கம்.,பா.எ.56.

103. **ஸ்ரீகைலாசநாதபுராணம்**.,சலந்தராசுரன் வதைச்சருக்கம்., பா.எ.14.
104. லிங்கபுராணம் 2.79.18-20
105. **ஸ்ரீகைலாசநாதபுராணம்**.,நித்திய பூஜா விதியுரைத்தசருக்கம்., பா.எ.15.
106. **ஸ்ரீகைலாசநாதபுராணம்**., நித்திய பூஜா விதியுரைத்த சருக்கம்., பா.எ.62
107. **ஈழத்துச்சிதம்பரபுராணம்**.,விழாவயர் சருக்கம்., பா.எ.155.
108. **கல்ப்பமஞ்சரி,** (1924),சுவாமிநாதசாஸ்திரி,ரி. (பதி.ஆ) சாஸ்திரிசஞ்சீவினிஅச்சகம்,சென்னை. ப.33
109. **விரத சூடாமணி** 54-57
110. **லிங்கபுராணம்**, 1.79.15-17
111. **லிங்கபுராணம்**, 1.81.29-30
112. **நகுலகிரிப்புராணம்**.,மூர்த்திவிசேடமுரைத்தபடலம்., பா.எ.5.
113. **ஈழத்துச்சிதம்பரபுராணம்**,திண்ணபுரச்சருக்கம்,பா.எ.78.
114. **காமிகாகமம்**.,I.5.56.
115. **PuranicEncyclopaedia,** A Comprehensive work with special Reference to the Epic and Puranic Literature, P.798)
116. **நகுலகிரிப்புராணம்**.,திருநகரப்படலம்., பா.எ.11.
117. **ஈழத்துச்சிதம்பரபுராணம்**.,பாயிரம்., பா.எ.11.
118. **திருக்கேதீச்சரபுராணம்**.,கேதுபூசனைச்சருக்கம்.,பா.எ.19.
119. **ஸ்ரீகைலாசநாதபுராணம்**.,ரதோற்சவசருக்கம்.,பா.எ.18.
120. **Tamil Lexicon Vol-v**, **Part-I**, ப.2634
121. **காரணாகமம்**,1.30.422-426.
122. **ஸ்ரீகைலாசநாதபுராணம்**,நித்தியபூஜா விதியுரைச் சருக்கம், பா.எ.25.
123. மேலது,பா.எ. 26.
124. மேலது,வரலாற்றுச்சருக்கம், பா.எ.51.
125. மேலது, நித்தியபூஜா விதியுரைத்சருக்கம்,பா.எ 08.
126. **PuranicEncyclopaedia,**A Comprehensive work with special Reference to the Epic and Puranic Literature, P.507.
127. **ஈழத்துச்சிதம்பரபுராணம்**,திண்ணபுரச்சருக்கம்,பா.எ 50.
128. மேலது,அந்தணர் பூசை புரி சருக்கம், பா.எ.19.

**பின்னிணைப்பு - 01**

# இலங்கையில் திருக்கோயில்கள் மீதெழுந்த தலபுராணங்கள்

| இல | தலபுராணப்பெயர் | நூலாசிரியர் | காலம் (நூ.ஆ) | இறைவன் |
|---|---|---|---|---|
| 01 | தக்ஷிணகைலாச புராணம் | சிங்கைச் செகராசசேகரன் / பண்டிதராசர்.* | 14 / 16 | சிவன் |
| 02 | திருக்கரைசைப்புராணம் | – | 15 | சிவன் |
| 03 | திரிகோணாசல புராணம் | – | 19 | சிவன் |
| 04 | நகுலகிரிப் புராணம் | கா.அப்பாசாமி ஐயர் * | 19 | சிவன் |
| 05 | இளந்தாரிப் புராணம் | இனுவை சின்னத்தம்பிப்புலவர் | 18 | சிவகாமி |
| 06 | நகுலாசல புராணம் | மாதகல் ஏரம்பையர்* | 20 | சிவன் |
| 07 | திருக்கேதிச்சரப் புராணம் | பண்டிதர் ச. இராமச் சந்திரன் | 20 | சிவன் |
| 08 | திருக்கேதீச்சரப் புராணம் | கு.வைத்தீசுவரக்குருக்கள். * | 20 | சிவன் |
| 09 | ஈழத்துச்சிதம்பர புராணம் | சோ.இளமுருகனார். | 20 | சிவன் |
| 10 | ஸ்ரீ கைலாசநாத புராணம் | நா.சிவசுப்பிரமணிய சிவாசாரிய் * | 20 | சிவன் |
| 11 | தென்கோவிற் புராணம் | நா சிவசுப்பிரமணிய சிவாசாரியர் . | 20 | சிவன் |
| 13 | கதிர்காமப் புராணம் | சி.நாகலிங்கம்பிள்ளை | 20 | முருகன் |
| 14 | வல்லிப்புரத்தான் தலபுராணம் | கு.பெரியதம்பி. முருக வே.பரமநாதன் | 20 | விஷ்ணு |
| 15 | சித்தாண்டித் தலபுராணம் | அளகேசமுதலியார். | 20 | முருகன் |
| 16 | வல்வெட்டி அருள்மிகு வேவில் வீரகத்தி விநாயகர் ஆலய தலபுராணம். | ஆ . கதிர்காமத்தம்பி | 20 | விநாயகர் |
| 17 | வீரபத்திர சிவபுராணம் என வழங்கும் அருள்மிகு விசுவேசர் புராணம். | க. மயில்வாகனப்புலவர் | 21 | சிவன் |

குறிப்பு :- அந்தணர் சமூகம் – .

# இந்துக் கோயிற் பண்பாட்டு கட்டுருவாக்கத்தில் புராணங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| விநாயகர் | விநாயக சஷ்டியின்<br>20ம் நாள் | கஜமுகாசுர சங்காரம் | நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில்<br>இணுவில் பரராஜசேகரபிள்ளையார் கோயில்<br>மருதடிவிநாயகர் ஆலயம் | பார்கவபுராணம்<br>விநாயகபுராணம் |
| சுப்பிரமணியன் | ஸ்கந்தசஷ்டி<br>6ம் நாள் | சூரன்போர் | நீர்வைக்கந்தன் திருப்பெருந் திருவடிவம் நல்லூர். மாவிட்டபுரம், செல்வச் சன்னதி,பொலிகண்டி | ஸ்கந்தபுராணம்<br>திருச்செந்தூர்ப்புராணம்<br>பழனிபுராணம் |
| சிவன் | ஐப்பசி கடைசி வெள்ளி<br>திருவெம்பாவை 6ம் நாள்<br>மஹோற்சவம் 23ம் நாள் | யமசங்காரம்<br>புட்டுக்கு மண் சுமந்த உற்சவம்<br>மாம்பழத் திருவிழா | நல்லூர் கைலாசநாதர் ஆலயம்<br>நல்லூர் கைலாசநாதர் ஆலயம்<br>நல்லூர் கந்தசுவாமி நீர்வேலி அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி தேவஸ்தானம் | சிவபுராணம்,<br>கைலாசநாதபுராணம்<br>திருவாதவூரடிகள் புராணம்<br>பழனி புராணம்<br>சிவபுராணம் |
| அம்பாள் | நவராத்திரி 10ம்நாள் | மஹிஷாசுர சம்ஹாரம் | நல்லூர்சிவன்<br>வண்ணை வீரமாகாளி<br>சுதுமலை புவனேஸ்வரி<br>தெல்லிப்பழை துர்க்கை | ஸ்கந்தபுராணம்<br>மார்க்கண்டேய புராணம்<br>தேவீமகாத்மியம்<br>2ம் அத்தியாயம் |
| ஐயப்பன் | மார்கழி 15ம் நாள் | மஹிசி சங்காரம் | கோண்டாவில் ஐயப்பன் கோயில் | சாஸ்தா விஜயம் |



கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி.(திருமதி).சுகந்தினி சிறிமுரளிதரன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்துறையின் முதுநிலை விரிவுரையாளராவார். இவர் 1994ம் ஆண்டு இந்துநாகரிகச் சிறப்புக்கலைமாணிக் கற்கை நெறியில் முதல் வகுப்பில் சித்தி பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் டாக்டர்.ஆனந்தக்குமாரசுவாமி நினைவுப் புலமை பரிசில். 1992 ஆம் ஆண்டுக்கான கலைப்பீடத்தின் சிறந்த முதன்மை மாணவருக்கான ஸ்ரீஸ்கந்தராஜா நினைவுப் பரிசில் என்பவற்றையும் பெற்றுக் கொண்டவர்.

1996ஆம் ஆண்டில் இந்துநாகரிகத்துறையில் விரிவுரையாளராக நியமனம் பெற்ற இவர் தகைசார் பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயரின் மேற்பார்வையில் "யாழ்ப்பாணத்து இந்துக் கோயிற் கட்டடக்கலை சிறப்பாக சிவாலயங்களோடு தொடர்புபடுத்திய ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் ஆய்வு செய்து 2002 ஆம் ஆண்டில் முதுகலைமாணிப்பட்டத்தினைப் பெற்றவர். பேராசிரியர் மா.வேதநாதன் அவர்களின் மேற்பார்வையில் "இலங்கையில் தோன்றிய தலபுராணங்கள் புலப்படுத்தும் சைவப் பண்பாடு - ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் ஆய்வு செய்து 2014 ஆம் ஆண்டில் கலாநிதிப்பட்டத்தினை பெற்றுக்கொண்டார்.

நடனத்துறை பதில்த் தலைவராகவும் (2006 - 2009). சித்திரமும் வடிவமைப்பும் அலகின் இணைப்பாளராகவும் (2007 - 2009). பகுதிநேர விடுதிக்காப்பாளராகவும் (2007 - 2011) சம்ஸ்கிருதத் துறையின் பதில் தலைவராகவும் (2015) பணியாற்றியவர். தற்போது சைவசித்தாந்த முதுகலைமாணிப்பட்டப்படிப்பின் இணைப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இந்து நாகரிகத்துறையினரால் 2016 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட முதலாவது அனைத்துலக சைவமாநாட்டின் இணைப்பாளராகவும். 2017ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இரண்டாவது அனைத்துலக சைவமாநாட்டின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். உள்ளூர் மற்றும் சர்வதேச கருத்தரங்குகளிலும் இவர் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.